வளர்ச்சிக்கு வழிகோலும்

ஸகாத்

உஸ்தாத்

சையத் அப்துர் ரஹ்மான் உமரி

மர்யம் பப்ளிகேஷன்ஸ்

கோயமுத்தூர் +91 7871 6111 73

வளர்ச்சிக்கு

வழிகோலும்

‘ஸகாத்’

வளர்ச்சிக்கு வழிகோலும் ஸகாத்!

ஆசிரியர்: சையத் அப்துர் ரஹ்மான் உமரி

விலை: **Rs.25.00**

பக்கங்கள்: 48

முதல் பதிப்பு: மே, 2017. ஷஅபான் 1438

ஒளி அச்சு: ஆஃபாக், 7871611173

அச்சு: SKS Print, சென்னை, 044 2861 2709

வெளியீடு:

மர்யம் பப்ளிகேஷன்ஸ்

28, காவேரி நகர் இரண்டாம் தெரு,
குனியமுத்தூர், கோயமுத்தூர். 641 008

தொடர்புக்கு: 9171411515, 7871611173

E-mail : syedumari@ymail.com

بسم الله الرحمن الرحيم

பதிப்புரை

இறையருள் நிலமெங்கும் பரவட்டும்! இறைவழிகாட்டு தலின் படிசெயல்பட்டு மாநிலம் தழையட்டும்!

செல்வத்தை சிலர் தனியுடைமையாகப் பார்க்கின்றார்கள். தாங்கள் சம்பாதித்தது தங்களுக்கு உரியதே என்பது அவர்களது கோட்பாடு.

இன்னும் சிலரோ செல்வத்தை பொதுவில் வைக்க முயற்சிக் கின்றார்கள். செல்வம் பொதுச்சொத்து!. உனக்கு என்ன தேவை யோ அதை நீ பெற்றுக் கொள் என்கின்றார்கள் இத்தகையோர்.

செல்வத்தையும் செல்வத்தைப் பற்றி மேற்கண்டபடி கூறு கின்ற மனிதர்களையும் படைத்த ஓரிறைவனின் மார்க்கமான இஸ்லாம் என்ன கூறுகின்றது?

செல்வம் இறைவனுக்கு உரியது!.

தனது கருணையால் அவனாகப் பார்த்து உங்களுக்குக் கொடுத் துள்ளான். ஆகையால் அவன் சொன்னபடி அவன் சொன்ன வழி யில் அதனைச் செலவு செய்யுங்கள்! - என்கின்றது, இஸ்லாம்!.

இதோ, ‘மேலும், அல்லாஹ் உங்களுக்கு வழங்கியிருக்கும் செல்வத்திலிருந்து அவர்களுக்கு வழங்குங்கள்’. (அல்குர்ஆன் 24:33)

எல்லா இபாதாக்களையும் மக்கள் ஒருவித அலட்சிய மனோ பாவத்தோடு தான் அணுகுகின்றார்கள். அதிலும் ஸகாத் விஷயத் திலோ சொல்லவே தேவையில்லை. ரமழான் மாதம் வந்து விட்

டால் ஸகாத்தைக் குறித்து ஏராளமானோர் நேரிலும் போனிலும் சந்தேகம் கேட்கின்றார்கள். அத்துனை பேர்களுடைய கேள்வி களின் பின்னணியிலும் ஒரே ஓர் அம்சம் நீக்கமற நிறைந்துள் ளதைக் காணமுடிகின்றது. ‘எப்படியாவது ஸகாத் கொடுக்க வேண்டிய தொகை குறைந்துவிடாதா?’ என்னும் எதிர்பார்ப்பே அது!.

ஸகாத் என்றால் என்னவென்றே தெரியாத நாம் அதனை தூக்கவே முடியாத சுமையாகவே கருதிக் கொண்டுள்ளோம். சுமை கொஞ்சம் குறையாதா? என்னும் ஏக்கம், ஈமான் இருப்ப தாக நினைத்துக் கொண்டுள்ள உள்ளங்களில் இருந்து நிரம்பி கேள்விகளாக வழிகின்றது!.

ஸகாத் என்றால் பரிசுத்தம், தூய்மை!. கூடவே செழிப்பு, வளர்ச்சி என்னும் பொருளையும் இச்சொல் தருகின்றது. தூய் மையான ஒரு பொருள் இயல்பாகவே வளரும்!.

ஸகாத் கொடுப்பதால் உள்ளம் தூய்மை அடைகின்றது. ஆன்மா பரிசுத்தம் அடைகின்றது என்பதோடு வாழ்வாதாரத்தில் வளமும்செழிப்பும் ஏற்படுகின்றது. உண்மைதானே?

இஸ்லாமிய ஷரீஅத் பயன்படுத்துகின்ற வார்த்தை எந்தளவுக்கு விரிவான பொருள் கொண்டு வளமாகத் திகழுகின்றது, பார்த் தீர்களா?

நேர்க்கோட்டில் நல்லதொரு விஷயத்தை ஏந்திவந்துள்ள இச்சிறுநூலை வெளியிட வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ள வல்ல இறைவனுக்கே எல்லாப் புகழும்!.

மர்யம் பப்ளிகேஷன்ஸ்

அடிப்படைத் தூண்களுள் ஒன்று!

இஸ்லாமிய வணக்க வழிபாடுகளில் தலையாய இடம் வகிக்கும் ஐந்து தூண்களில் ஒன்றாக ‘ஸகாத்’ திகழுகின்றது. தொழுகையையும் ஸகாத்தையும் அல்லாஹ் *றப்புல் ஆலமீன்* திரும்பத்திரும்ப தனது வழிகாட்டலாம் அருள்மறையில் வலியுறுத்திச் சொல்கிறான்.

இறைவனை நினைவு கூர்ந்து கொண்டே இருக்கவேண்டும், அவனுக்கு மட்டுமே கட்டுப்பட்டு அடிபணிந்து வாழவேண்டும் என்னும் அடிப்படையை அலட்சியப்படுத்திவிடக்கூடாது என்பது தான் தொழுகைக்கான தூண்டுகோலாக அடிப்படைக் காரணமாக விளங்குகின்றது!.

அதுபோலவே, இறைவன் நமக்கு அளித்துள்ள செல்வத்தை அவனது வழியில் அவனது உவப்புக்கு ஏற்றவகையில் செலவு செய்யவேண்டும், நம்முடைய அடிப்படைத் தேவைகளை நிறை வேற்றியது போக, உபரியாய் உள்ள செல்வத்தை இறைவனுக்கு விருப்பமான வழியில் செலவிட முன்வர வேண்டும் - என்பதுதான் ஸகாத்திற்கான அடிப்படைக் காரணமாக உள்ளது!.

மனதை நிலைப்படுத்தி இஸ்லாமிய இலட்சியத்தை நோக்கி நம்மைச் செலுத்துவதற்கு தொழுகை காரணமாக அமைகின்றது என்றால் பணத்தை முறைப்படுத்தி இறைவழியில் செலவு செய்ய வைத்து இறைவனுக்கு பிரியமானவர்களாக நம்மை ஆக்குவதில் ஸகாத் முன்னின்று செயல்படு கின்றது!.

ஸகாத் என்பதன் பொருள்!

இறைவழியில் செலவு செய்வதை இஸ்லாம் ஊக்குவிக்கின்றது. இறைவனுடைய பிரியத்தையும் நெருக்கத்தையும் உவப்பையும் பெற்றுத் தரக்கூடிய வகையில் அவனுக்கு விருப்பமான வழிகளில் நம்முடைய செல்வத்தை செலவளிப்பதுதான் இறைவழியில் செலவு

செய்தல் ஆகும்!. அல்லாஹ்வுடைய வழியில் மேற்கொள்ளப்படும் அனைத்துவகை செலவுகளையும் குறிக்க ஆரம்பத்தில் ஸகாத் என்னும் சொல்லே ஆளப் பட்டது. தற்போது ஸதக்கா என்னும் சொல் எப்பொருளில் பயன்படுகின்றதோ அதே பொருளில்!.

பிறகு குறிப்பிட்ட ஒரு தொகையை கொடுத்தே ஆகவேண்டும் என்னும் விதி ஏற்பட்டபிறகு, அதைக் குறிப்பிட ஸகாத் என்னும் சொல் பயன்படுத்தப் பட்டது. பொதுவான தான-தருமங்களை *'ஸதக்கா'* என்றும் இறைவழியில் செலவு செய்தல் என்பதைக் குறிக்க *'இன்ஃபாக் ஃபீ ஸபீலில்லாஹ்'* அல்லது *'இன்ஃபாக்'* என்றும் கூறு கின்றோம்.

ஸகாத் என்றால் என்ன?

ஸகாத் என்னும் சொல் *ஸகா, யஸ்கூ, ஸகாத்தன்* என விரிகின்றது. தூய்மையடைதல் என்பதே இதன் நேரடிப்பொருள்!.

குற்றங்களைவிட்டு தூய்மையடைந்த மாசுமருவற்ற உள்ளம் அரபியில் *நஃப்ஸ் ஸகிய்யா* எனப்படுகின்றது. மூஸா மற்றும் கிழ்று (அலைஹிமா அஸ்ஸலாம்) அவர்களுடைய நிகழ்வில் குற்றமேதும் செய்யாத அந்த அப்பாவிச் சிறுவனை *நஃப்ஸன் ஸகிய்யா* என்றே குறிப்பிடுகிறார்கள்.

அடுத்து, செழித்து வளருவது என்னும் பொருளையும் தன்னுள் அது கொண்டுள்ளது. *ஸகா அஸ்ஸர்உ* எனில் வயல் செழித்தது எனப் பொருள்.

ஸகாத் என்னும் சொல்லில் தூய்மை, செழித்து வளருதல் ஆகிய இரு பொருள்களும் அடங்கியுள்ளன. அதன்படி, ஸகாத், ஆன்மாவையும் செல்வத்தையும் தூய்மைப்படுத்துகின்றது; அச்செல்வத்தில் வளத் தையும் பெருக்கத்தையும் உண்டாக்குகின்றது. அழிவில் இருந்து பாதுகாக்கின்றது. கஞ்சத்தனம் என்னும் நோயிலிருந்து அகத்தையும் ஆன்மாவையும் பாதுகாக்கின்றது.

வான்மறை குர்ஆனின் ஒரு சில வசனங்கள் இவ்வுண்மையைப் பறைசாற்றுகின்றன. உதா,

خُذْ مِنْ أَمْوَالِهِمْ صَدَقَةً تُطَهِّرُهُمْ وَتُزَكِّيهِمْ بِهَا

‘அவர்தம் செல்வத்தில் இருந்து சதக்காவைப் பெற்று அதைக் கொண்டு அவர்களைத் துய்மைப் படுத்துவீராக! அவர்களை தஸ்கியா செய்வீராக!’ (அல்குர்ஆன் 9:103)

மற்றோரிடத்தில்,

وَمَا آتَيْتُمْ مِنْ رِبًا لِيَرْبُوَ فِي أَمْوَالِ النَّاسِ فَلَا يَرْبُو عِنْدَ اللَّهِ

وَمَا آتَيْتُمْ مِنْ زَكَاةٍ تُرِيدُونَ وَجْهَ اللَّهِ فَأُولَئِكَ هُمُ الْمُضْعِفُونَ

‘மக்களுடைய பொருள்களுடன் கலந்து பெருக வேண்டும் என்பதற்காக நீங்கள் வட்டிக்கு விடும் பணம் அல்லாஹ்விடத் தில் பெருகுவதில்லை. ஆனால், அல்லாஹ்வின் உவப்பைப் பெறவேண்டுமென நாடியவர்களாய் நீங்கள் வழங்கும் ஜகாத் அதனை வழங்குவோர்தாம் உண்மையில் தம்முடைய செல்வத் தைப் பெருக்கிக் கொள்பவர்களாவர்’(அல்குர்ஆன் 30:39)

அடிப்படைக் கடமை!

இஸ்லாமிய அடிப்படைக் கடமைகளுள் ஸகாத்-தும் ஒன்று!.

وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَأَطِيعُوا الرَّسُولَ لَعَلَّكُمْ تُرْحَمُونَ

‘தொழுகையை நிலைநாட்டுங்கள், ஸகாத்தையும் வழங்குங்கள், இறைத்தூதருக்குக் கீழ்ப்படியுங்கள்!. நீங்கள் கருணை காட்டப் படலாம்’ (அல்குர்ஆன் 24:56)

வான்மறை குர்ஆனில் ஏறத்தாழ 32 இடங்களில் ஸகாத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதனுடைய முக்கியத்துவத்தை இதன் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

‘இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் முஆதை (ரழியல்லாஹ் அன்ஹு) யமன் தேசத்துக்கு ஆளுநராக அனுப்பினார்கள். அப்போது அவரிடம், ‘நீங்கள் வேதம்

கொடுக்கப்பட்ட மக்களிடம் செல்கிறீர்கள். எனவே அவர்களை முதன் முதலில் இறைவணக்கத்தின் பால் அழைப்பீராக! அவர்கள் அல்லாஹ்வை ஏற்றுக் கொண்டால் ஒவ்வொரு நாளும் இரவிலும் பகலிலுமாக ஐந்து வேளை தொழுகைகளை அல்லாஹ் அவர்களின் மீது கடமையாக்கியிருக்கிறான் என்பதை அவர்களுக்கு தெரிவிப் பீராக! தொழுகையை அவர்கள் நிறைவேற்றினால் அவர்களின் செல்வங்களிலிருந்து வசூலித்து அவர்களிடையே உள்ள ஏழை களுக்குக் கொடுக்க வேண்டிய ஸகாத்தை அல்லாஹ் அவர்களின் மீது கடமையாக்கியுள்ளான் என்று அவர்களுக்குத் தெரிவிப்பீராக! அவர்கள் கட்டுப்பட்டால் அவர்களிடமிருந்து ஸகாத் பெறுவீராக! மக்களின் பொருட்களில் உயர்தரமானவற்றை வசூலிக்காதீர்!' என்னும் வழிகாட்டலை வழங்கி அனுப்பினார்கள். (புகாரி, எண் 1458)

இஸ்லாமின் ஓரம்சம்

தொழுகையைப் போல, நோன்பைப் போல, ஸகாத்தும் இஸ்லாமின் அடிப்படை ஆதாரங்களுள் ஒன்றாகும்!. ஆகையால்தான், நமக்கு முன் சென்ற அனைத்து சமுதாயங்களின் மீதும் ஸகாத் கடமையாக இருந்துள்ளது.

இஸ்லாம் கூறும் அடிப்படை நன்மைகள்

கடைசி கேள்விக்கான விடையில் ஒரு வேண்டுகோள் இருக்கின்றது. குர்ஆனை ஆராய்ந்து பார்க்கும் போது ஒரு விஷயம் உங்களுக்கு தெளிவாகும். இஸ்லாமில் தொழுகையும் ஜகாத்தும் தான் அடிப்படை நற்செயல்களாக நற்செயல்களுக்கெல்லாம் அஸ்திவாரமாக திகழுகின்றன. இவ்விரு நற்செயல்களின் கீழாகத்தான் மற்ற எல்லா நற்செயல்களும் திரண்டு நிற்கின்றன. இன்னும் சொல்லப் போனால் இவ்விரண்டிலிருந்து தான் மற்ற யாவும் தோன்றுகின்றன. ஆகையால், குர்ஆன் பல்வேறு இடங்களில் இஸ்லாமிய நற்செயல்கள் அனைத்தையும் குறிப்படுகின்ற எண்ணத்தில் இவ்விரண்டை மட்டுமே சொல்லிக் காட்டுகின்றது. உதா,...

فَإِنْ تَابُوا وَأَقَامُوا الصَّلَاةَ وَآتَوُا الزَّكَاةَ فَإِخْوَانُكُمْ فِي الدِّينِ

அவர்கள் மனம் திருந்தி மீண்டு தொழுகையை நிலைநிறுத்தி ஸகாத்தையும் கொடுத்து வந்தால் மார்க்கத்தில் உங்களுடைய சகோதரர்களாக ஆகிவிடுவார்கள். (அல்குர்ஆன் 9:11)

இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களை பாராட்டும்போது குர்ஆன் கூறுகின்றது,

وَكَانَ يَأْمُرُ أَهْلَهُ بِالصَّلَاةِ وَالزَّكَاةِ وَكَانَ عِنْدَ رَبِّهِ مَرْضِيًّا

அவர் தமது இல்லத்தாருக்கு தொழுகையையும் ஸகாத்தையும் ஏவி வந்தார். தன்னுடைய இறைவனிடத்தில் அன்பிற்குரியவராக திகழ்ந்தார் (அல்குர்ஆன் 19:55)

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுடைய வாய் வார்த்தைகளில்,

وَجَعَلَنِي مُبَارَكًا أَيْنَ مَا كُنْتُ وَأَوْصَانِي بِالصَّلَاةِ وَالزَّكَاةِ مَا دُمْتُ حَيًّا

நான் உயிரோடு இருக்கும் காலம் வரை தொழுகையையும் ஸகாத்தையும் உபதேசிக்குமாறு எனக்கு ஆணையிடப் பட்டுள்ளது. (அல்குர்ஆன் 19:31)

மேலே நாம் தொட்டுக்காண்பித்த வசனங்களில் தொழுகையும் ஸகாத்தும் மட்டும் தான் கூறப்பட்டுள்ளன. ஆனால், இதனை வாசிக்கின்ற யாவரும் இவ்விரு விஷயங்கள் மட்டுமே இவ்விரு விஷயங்களை சொல்வது மட்டுமே நோக்கமல்ல மாறாக, எல்லா நன்மைகளையும் சுட்டிக் காண்பிப்பதும் நோக்கம் என்பதை எளிதாக உணருவார். இருப்பினும் மற்ற எல்லா நன்மைகளும் இவ்விரு வேர்களிலிருந்துதான் பிறக்கின்றன என்பதால் வேரை மட்டும் இங்கு சுட்டிக் காண்பித்துவிட்டு கிளைகளைப் பற்றி சொல்லாமல் விட்டு விட்டது குர்ஆன். இரண்டு விஷயங்களையும் குறித்து சற்றே சிந்தித்துப் பார்த்தால் மார்க்கத்தில் இவ்விரண்டிற்கும் இப்படிப்பட்ட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டே தீர வேண்டும் என்பதை புரிந்து கொள்ளலாம்.

ஒரு மனிதன் அல்லாஹுத் தஆலாவின் அடிமையாக முழுமையான அளவுக்கு மாறி விட்டால் அவனுக்கு என்ன தேவை? ஒரு பக்கம் அவன் தன் இறைவனோடு முழுக்க முழுக்க இணைந்து விடவேண்டும் இன்னொரு பக்கம் இறைவனின் படைப்பினங்

களோடு முறையான தொடர்பை அவன் நிலை நிறுத்தியாக வேண்டும்.

அதுதானே? அப்படித்தானே?

தொழுகை இறைவனோடு சரியான விகித்தத்தில் மனிதனை இணைக்கின்றது. *இன்ஃபாக்* இறைவழியில் செலவு செய்வதன் மூலமாக படைப்பினங்களோடு அவனுடைய தொடர்பு முறையான வடிவில் ஒழுங்காக அமைகின்றது.

ஒரு மனிதன் தன் இறைவனுடைய உரிமைகளை முழுமையாக நிறைவேற்றுகிறான் இறைவனின் படைப்பனங்களுக்கான உரிமைகளை முறையாக நிறைவேற்றுகிறான் என் றால் அவன் எல்லா நன்மைகளையும் அடைவதற்கான திறவுகோளை பெற்று விட்டான் என்றுதான் பொருள்.

இவ்விரண்டு விஷயங்களின் மூலமாக மற்றெல்லா நன்மைகளின் வாசல்கள் ஒன்றன்பின் ஒன்றாக திறந்து கொண்டே செல்கின்றன. அனைத்தையும் கைக்கொள்வது அவனுக்கு மிகவும் எளிதானதாக ஆகிவிடுகின்றது. இதேபோன்ற ஒருகருத்தை இறைத்தூதர் மஸீஹ் அலைஹிஸ் ஸலாம் சொல்லியுள்ளார்கள்.

‘அவர்களில் நியாயசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதிக்கும்படி: போதகரே, நியாயப் பிரமாணத்திலே எந்தக்கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார். (மத்தேயு 22 ஆம் அத்தியாயம் 36-40) (கற்பனை எனில் கற்பிக்கப்பட்ட கட்டளை)

இவ்விரு நன்மைகளின் மீதாகத்தான் தீனும் ஷரீஅத்தும் முழுமையாக நிலை கொண்டுள்ளன என்பது மஸீஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்களுடைய கூற்றிலிருந்து நமக்கு தெளிவாகின்றது. இவ்விரண்டும் அடிப்படை நன்மைகளாக அமைகின்றன என்பது குர்ஆனின்

மூலமாக மட்டும் நமக்கு விளங்குவதில்லை மாறாக தவ்றாத்திலும் பைபிளிலும் இறைத்தூதர்களுக்கு அருளப்பட்ட வேதங்கள் ஆகமங்கள் அனைத்திலும் இந்த விஷயம் தெளிவாக உரைக்கப்பட்டுள்ளது.

وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللَّهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ حُنَفَاءَ

وَيُقِيمُوا الصَّلَاةَ وَيُؤْتُوا الزَّكَاةَ وَذَلِكَ دِينُ الْقَيِّمَةِ

‘அல்லாஹ்வுக்கு வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக (தவறான வழியிலிருந்து விலகி சரியான வழியில்) பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும், மேலும் தொழுகையை அவர்கள் நிலைநாட்டவேண்டும், மேலும் ஜகாத்தை அவர்கள் வழங்க வேண்டும் என்பதைத் தவிர (வேறெதுவும்) அவர்களுக்குக் கட்டளை யிடப்படவில்லை. இதுதான் நேரான மார்க்கமாகும்’. (அல்குர்ஆன் 98:5)

அடிப்படையான விஷயங்களில் அசைந்து கொடுக்காமல் ஆணி அடித்தாற்போன்று நின்றோம் என்றால் வெற்றிக்கான உத்தரவாதமாக அதுவே ஆகிவிடும்!.

தல்ஹா இப்னு உபைதில்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார், ‘நஜ்த் என்ற ஊரைச் சார்ந்த ஒருவரை பரட்டைத் தலையோடு நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் வந்தார். அவரின் குரல் செவியில் ஒலித்தது. ஆனால் அவர் என்ன சொல்கிறார் என்பது புரியவில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்அவர்களின் அருகில் வந்ததும் இஸ்லாமைப் பற்றிக் கேட்டார்.

அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ‘இஸ்லாம் (என்பது) இரவிலும் பகலிலும் ஐவேளைத் தொழுகைகள்! என்றார்கள். உடனே அவர் ‘அத்தொழுகையைத் தவிர வேறு (தொழுகை) ஏதாவது என் மீது கடமை உண்டா?’ என்றார். அதற்கவர்கள் ‘நீங்கள் விரும்பிச் செய்தாலே ஒழிய வேறு இல்லை!’ என்றார்கள்.

அடுத்து ‘ரமழான் மாதம் நோன்பு நோற்க வேண்டும்’ என இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள். உடனே அவர் ‘அதைத்தவிர வேறு ஏதேனும் (நோன்பு)

என் மீது கடமையுண்டா?' என்றார்.

அதற்கவர்கள் 'நீங்கள் விரும்பிச் செய்தாலே ஒழிய வேறு இல்லை' என்றார்கள். அவரிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஸகாத் பற்றியும் கூறினார்கள். அதற்கவர் 'அதைத் தவிர வேறு தர்மங்கள் உண்டா? என வினவினார். அதற்கு அண்ணலார் 'அதைத் தவிர வேறு கடமையில்லை' என்றார்கள்.

அப்போது அம்மனிதர் 'அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் இவற்றை விட கூட்டவும் மாட்டேன்; குறைக்கவும் மாட்டேன்' என்ற வாறு திரும்பிச் சென்றார். அப்போது 'இவர் சொன்னபடி நடந்து கொண்டால் வெற்றி அடைந்துவிட்டார்' என்று இறைத்தூதர் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம்அவர்கள் கூறினார்கள். (புகாரி, எண்ঃ 48)

வேறொரு நபிமொழியில் இவ்வாறு கேள்வி கேட்டுவிட்டுச் சென்ற ஒரு நாட்டுப்புற அரபியைப் பார்த்து அண்ணலார், *'உங்களில் யாரேனும் சொர்க்கவாசியைப் பார்க்க ஆசைப்பட்டால் இதோ இவரைப் பார்த்துக் கொள்ளுங்கள்'* என்று கூறியுள்ளார்கள். (புகாரி)

இஸ்லாமை விட்டு பிரிக்கவே முடியாத அம்சமாக ஸகாத் விளங்கு கின்றது. இஸ்லாம் என்றாலே தொழுகையும் ஸகாத்தும்தான்!. வழிபாடுகள் (இபாதத்), கட்டுப்பாடு (இதாஅத்) என்பனவற்றின் குறியீடுகளாக இவை இரண்டும் திகழுகின்றன!.

ஆரம்ப நாள்களில் இஸ்லாமை தம்முடைய வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொள்ள முன்வருகின்ற ஒவ்வொருவரும் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் உறுதிமொழி எடுத்துக் கொள்வார்கள். அதில் கட்டாயமாக இவ்விரு விஷங்களும் இடம் பெற்றிருக்கும்.

'நான் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர் களிடம் தொழுகையை நிலைநிறுத்துவதாகவும் ஸகாத் வழங்கு வதாகவும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் நலன் நாடுவதாகவும் உறுதி மொழி (பைஅத்) எடுத்துக் கொண்டேன்' என ஜரீர் இப்னு அப்துல்லாஹ் அறிவிக்கிறார். (புகாரி)

கொடுக்க மறுப்போரின் நிலை!

وَيُقِيمُوا الصَّلَاةَ وَيُؤْتُوا الزَّكَاةَ وَذَٰلِكَ دِينُ الْقَيِّمَةِ

بِعَذَابٍ أَلِيمٍ يَوْمَ يُحْمَىٰ عَلَيْهَا فِي نَارِ جَهَنَّمَ فَتُكْوَىٰ بِهَا جِبَاهُهُمْ وَجُنُوبُهُمْ

وَظُهُورُهُمْ هَٰذَا مَا كَنَزْتُمْ لِأَنْفُسِكُمْ فَذُوقُوا مَا كُنْتُمْ تَكْنِزُونَ

எவர்கள் தங்கத்தையும், வெள்ளியையும் சேகரித்து வைத்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யாம லிருக்கின்றார்களோ அவர்களுக்குத் துன்புறுத்தும் தண்டனை இருக்கிறது எனும் 'நற்செய்தி' யினை நீங்கள் அறிவித்து விடுங்கள்! ஒருநாள் வரும்; அந்நாளில் இதே தங்கமும், வெள்ளியும் நரக நெருப்பில் பழுக்கக் காய்ச்சப்பட்டு பிறகு அவற்றால் அவர்களின் நெற்றிகளிலும், விலாப்புறங்களிலும், முதுகுகளிலும் சூடு போடப் படும்! இவைதாம் நீங்கள் உங்களுக்காக சேகரித்து வைத்திருந்த கருவூலங்கள்! எனவே நீங்கள் சேகரித்து வைத்திருந்த செல்வத்தைச் சுவையுங்கள்!' (அல்குர்ஆன் 9:34, 35)

இங்கே நாம் இஸ்லாமிய வாழ்வியலின் அடிப்படை விதி ஒன்றை புரிந்து கொள்வது நலம். சமூகத்தின் செல்வமானது குறிப்பிட்ட ஒரு சிலரிடம் மட்டுமே குவிந்து கிடப்பதை இஸ்லாம் அங்கீகரிக்க வில்லை.

(மிகப்பெரிய செல்வந்தர்கள் இன்று உலகில் 1 சதவிகிதம் பேர். இவர்கள் வசம் உள்ள மொத்த செல்வத்தின் சதவிகிதம் 45. கூடிய விரைவில் இது 69 ஆக அதிகரிக்கும் என்கிறார்கள்.)

செல்வம் சமுதாயம் முழுவதிலும் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும். பணக்காரர்கள் செல்வத்தைக் குவித்துக்கொண்டே போக, ஏழைகள் மேலும் மேலும் பரம ஏழைகளாக மாறுவதை இஸ்லாம் அனுமதிப் பதே இல்லை!. வான்மறை குர்ஆன் தெள்ளத்தெளிவாக இதை எடுத்துரைக்கின்றது.

مَا أَفَاءَ اللَّهُ عَلَىٰ رَسُولِهِ مِنْ أَهْلِ الْقُرَىٰ فَلِلَّهِ وَلِلرَّسُولِ وَلِذِي الْقُرْبَىٰ

وَالْيَتَامَىٰ وَالْمَسَاكِينِ وَابْنِ السَّبِيلِ كَيْ لَا يَكُونَ دُولَةً بَيْنَ الْأَغْنِيَاءِ مِنْكُمْ

ஊர்வாசிகளிடமிருந்து தன் தூதரின் பக்கம் அல்லாஹ் திருப்பியவை அனைத்தும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் உறவினர்களுக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் பயணிகளுக்கும் சேரக்கூடியவை ஆகும். ஏனெனில் அது உங்களிலுள்ள செல்வந்தர்களிடையே மட்டும் சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது என்பதற்காக! (அல்குர்ஆன் 59:7)

அதனடிப்படையில் ஓர் இறைநம்பிக்கையாளரிடம் சேர்ந்து விடுகின்ற செல்வத்தைத் தூய்மைப்படுத்தும் விதமாகவும் சமூகப் பயன்பாட்டிற்கு அச்செல்வத்தை ஒதுக்குகின்ற வடிவிலும் குறைந்த பட்ச சதவிகித ஸகாத்தை இஸ்லாம் கடமையாக்கி உள்ளது. மேலே நாம் கண்ட இறை வசனத்திற்கான விளக்கமொன்று அபூ தாவூது நூலில் பதிவாகி உள்ளது.

இப்னு அப்பாஸ் கூறுகிறார், 'யார் பொன்னையும் வெள்ளியையும் சேகரித்து வைத்துக் கொண்டு - என்னும் வசனம் அருளப்பட்ட போது, முஸ்லிம்களுக்கு அது மிகவும் மனச்சுமையை ஏற்படுத்தியது. அப்போது உமர், 'நான் போய் விஷயம் அறிந்து வருகின்றேன்' என்றவாறு கிளம்பினார். 'இறைத்தூதர் அவர்களே, தங்களுடைய தோழர்களுக்கு இந்த இறை வசனம் பாரமாக உள்ளது' என்றார். அதற்கு அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், 'செல்வத்தை சுத்தமாக்குவதற்காகத்தான் அல்லாஹ் ஸகாத்தை கடமையாக்கி உள்ளான். (எஞ்சிய செல்வத்தை) உங்களுக்குப் பின்னால் வருகிறவர்கள் அடைந்து கொள்ளத்தான் வாரிசுரிமைச் சட்டங்களை இயற்றியுள்ளான்!' எனக் கூறினார்கள். 'அல்லாஹு அக்பர்!' என்றார் உமர்.

தொடர்ந்து இறைத்தூதர் கூறினார்கள், 'மனிதன் சேகரிக்கும் செல்வத்திலேயே சிறப்பானது எது தெரியுமா? சாலிஹான நல்ல மனைவிதான்!. அவளைப் பார்த்தாலே மகிழ்ச்சியைத் தருவாள். கட்டளையிட்டால் கீழ்ப்படிவாள், வெளியே தூரச்சென்றுவிட்டால் (கணவனின் பொருட்களைப்) பாதுகாப்பாள்!'.

ஆக, ஸகாத் கொடுப்பதனால் நம்முடைய செல்வம் தூய்மை அடைகின்றது. ஸகாத் என்பதே இஸ்லாமியப் பார்வையில் குறைந்தபட்ச அளவுதான்!. இக்குறைந்த பட்ச அளவைச் செலுத்தி விடுவதன் மூலம் நாம் மறுமையில் இறை தண்டனையை விட்டுத்

தப்பி விடுகின்றோம் என்பதோடு இம்மையிலும் வளத்தையும் செழிப்பையும் பெற்றுக் கொள்கின்றோம்.

ஆம், அல்லாஹ் ஜல்ல ஷானுஹூத் தஆலா குறிப்பிடுவதைப் போல, (30:39) ஸகாத் கொடுப்பதனால் நம்முடைய செல்வம் பல்கிப் பெருகுகின்றது என்பதே உண்மையாகும்!.

ஸகாத்தைக் கொடுத்துவிடுவதால் செல்வத்தின் அளவு குறைந்து விடுகின்றது என்று எண்ணுவது உண்மைக்கு மாற்றமானதாகும்!.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் T Ô Ú õ° PÒ , *'அல்லாஹ் யாருக்கேனும் செல்வத்தைக் கொடுத்து அவர், அதற்குரிய ஸகாத்தை முறைப்படி நிறைவேற்றவில்லை என்றால், கியாமத் நாளில் அச்செல்வம் கடுமையான நச்சுப்பாம்பாக மாறும்!. அவரது கழுத்தைச் சுற்றிக்கொண்டு தனது இரண்டு விஷப்பற்களால் அவரது தாடையைக் கொத்திக்கொண்டே, 'நான் தான் உன்னுடைய செல்வம்!. நான்தான் உன்னுடைய புதையல்!' என்று சொல்லும்'.*

தொடர்ந்து இறைத்தூதர்,

وَلَا يَحْسَبَنَّ الَّذِينَ يَبْخَلُونَ بِمَا آتَاهُمُ اللَّهُ مِنْ فَضْلِهِ هُوَ خَيْرًا لَهُمْ بَلْ هُوَ

شَرٌّ لَهُمْ سَيُطَوَّقُونَ مَا بَخِلُوا بِهِ يَوْمَ الْقِيَامَةِ

'அல்லாஹ் தனது அருளிலிருந்து தங்களுக்கு வழங்கியவற்றில் எவர்கள் கஞ்சத்தனம் புரிகின்றார்களோ அவர்கள் அதனைத் தமக்கு நல்லது என எண்ணிவிட வேண்டாம். மாறாக, அது அவர்களுக்கு மிகவும் கெட்டதாகும். தமது கஞ்சத்தனத்தின் மூலம் அவர்கள் சேமித்து வைத்தவை எல்லாம் மறுமைநாளில் அவர்களின் கழுத்தில் விலங்காகப் பூட்டப்படும்' என்னும் (3:180) இறைவசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

மறுமை நம்பிக்கை

மறுமையில் வெற்றிபெற வேண்டும், நரக நெருப்பில் இருந்து எப்படியாவது விடுதலை பெற்றுவிட வேண்டும் - என்பதுதான் ஓர்

இறை நம்பிக்கையாளனுடைய இதயத் துடிப்பாக இருக்கும்!. இதை மனதில் கொண்டுதான் 'ஒரேயொரு பேரீச்சம் பழத்தை ஸதக்கா செய்தாவது நரக நெருப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்!' என இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறி யுள்ளார்கள்.

மறுமையில் வெற்றிபெற வேண்டும்!. அதற்கு இறைவழியில் செலவு செய்து (இன்ஃபாக்) வரவேண்டும்! - என ஒரு நம்பிக்கை யாளன் நம்புவதால் ஸகாத்தை அவர் முறையாகக் கொடுத்து விடுவார். அத்தோடு மென்மேலும் அதிகமாக தன்னால் இயன்ற வரை இறைவழியில் செலவு செய்ய முயற்சிப்பார் என்றும் கூறலாம்.

ஆகையால்தான் ஸகாத் கொடுக்காதவர்களை உண்மையில் மறுமை நம்பிக்கை அற்றவர்கள் என பொட்டில் அறைந்தாற்போன்று ஓரிடத்தில் வான்மறை குர்ஆன் உரைக்கின்றது.

وَوَيْلٌ لِّلْمُشْرِكِينَ الَّذِينَ لَا يُؤْتُونَ الزَّكَاةَ وَهُم بِالْآخِرَةِ هُمْ كَافِرُونَ

இணைவைப்பாளர்களுக்கு அழிவுதான்! அவர்களோ, ஸகாத் வழங்குவதில்லை; இன்னும் மறுமையை நிராகரிக்கின்றார்கள். (அல்குர்ஆன் 41:6,7)

ஸகாத் - சில அடிப்படை விதிகள்

ஸகாத் தொடர்பான அடிப்படைச் சட்டங்களை காண்பதற்கு முன் இஸ்லாமிய அடித்தளத்தை சற்று கவனமாக மனதில் பதியவைத்துக் கொள்ளவேண்டும். இல்லையென்றால் நான் முன்பே குறிப்பிட்ட படி ஸகாத்தைக் குறைக்கும் நோக்கிலான கேள்விகளைத் தடுக்கவே இயலாது.

அல்லாஹ்வின் தூதர் காலத்தில் ஸகாத்தை வசூலிக்கும் அதிகாரி வேளாண் தொழில் புரியும் நபித்தோழர் ஒருவரிடம் கணக்கு பார்த்து ஸகாத் கேட்கிறார். ஆறு மாதங்கள் நிரம்பிய ஒட்டகைக் குட்டியை அவர் தந்தாக வேண்டும். அவர் அதனைத் தர மறுக்கிறார். இதைக் கொண்டுபோய் என்ன செய்வீர்கள்? கொழுத்த ஓட்டகமாகப் பிடித்துக் கொண்டு செல்லுங்கள் என்கிறார். இவர் வாங்க மறுக்

கிறார். அந்த தோழர் ஒட்டகத்தின் மூக்கணாங்கயிற்றைப் பிடித்த வாறு அண்ணலாரிடமே வந்து விடுகிறார். ஒப்படைத்த பின்புதான் செல்கிறார்.

இஸ்லாமிய அடித்தளம் என்ன? என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருந்த காரணத்தினால் ‘அப்படி’ இருந்தார்கள். அது புரியாத காரணத்தினால் நாம் ‘இப்படி’ இருக்கின்றோம்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். உலகை உய்விக்க வந்த மார்க் கம், சமத்துவம் நீதி நேர்மை போன்றவற்றை உலகத்திற்கே அறி முகப்படுத்திய மார்க்கம் என்றெல்லாம் ஊர்வாய் கிழிய பேசுகின் றோம். இந்த வார்த்தை நம்முடைய சொந்த உள்ளத்தில் பதிந்திருந் தால் ஓராயிரம், ஈராயிரம் விலை பெறுமானமுள்ள துண்டுநிலத்தை ஒரு லட்சம் இரண்டு லட்சம் என விற்போமா?

பொய்தானே சொல்லக்கூடாது? நாமென்ன பொய்யா சொல்கின் றோம்? என நமக்கு இசைவாக ஷரீஅத்தையும் வளைத்துக் கொள் கின்றோம்.

ஓராயிரம் மதிப்புள்ள நிலத்தை அல்லது பொருளை ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்பவன் எப்படி ஸகாத்தை ஒழுங்காகக் கொடுக்க முன்வருவான்? எப்படியாவது குறையாதா என்றுதான் எதிர் பார்ப்பான்!.

ஓர் அருட்கொடையை இறைவன் உங்களுக்கு அளித்துள்ளான் என்றால் ஒன்று அது உங்களுக்கு பயன்பட வேண்டும் இல்லை என்றால் சமூகத்திற்கு பயன்பட வேண்டும். இரண்டும் இல்லாமல் வெட்டியாக அதனை வைத்திருந்தீர்கள் என்றால் - தனிப்பட்ட பயன் பாட்டிலும் இல்லை, சமூகப் பயன்பாட்டிலும் இல்லை என்றால் - அப்பொருளின் உண்மையான சந்தை மதிப்பிற்கு நீங்கள் ஸகாத் கொடுத்தாக வேண்டும்!.

ஒரு வீடு உங்களிடம் இருக்கின்றது. அதனை நீங்கள் பயன்படுத்தி வருகின்றீர்கள். அதற்கு ஸகாத் இல்லை!. இன்னொரு வீடும் உங்களிடம் இருக்கின்றது. அதனை நீங்கள் வாடகைக்கு விட்டுள் ளீர்கள் என்றால் ஒரு வருடத்திற்கு என்ன வாடகை வருமோ அந்த வாடகைக்கு ஸகாத் கொடுத்தால் போதுமானது!.

நீங்களும் பயன்படுத்துவதில்லை, வாடகைக்கும் விடவில்லை என்றால் வெட்டியாக அவ்வப்போது போய் தங்கி வருவது என ‘உல்லாசப் பயன்பாட்டிற்கு’ வைத்துள்ளீர்கள் என்றால் வீட்டின் சந்தை மதிப்பிற்கு ஆண்டுதோறும் ஸகாத் கொடுத்தாக வேண்டும்.

இதுதான் ஷரீஅத்தின் பார்வை!. இதில் உடன்பாடு இல்லாதவர்கள் தமிழ்நாட்டில் பரவியிருக்கும் வேறு புதிய மதத்திற்கு மாறிக் கொள்ளலாம்!.

அடிப்படை விதிகள்

ஸகாத் தொடர்பான சில அடிப்படைச் சட்டங்களை நாம் இனி காணலாம். எந்தெந்த பொருட்களின் மீது ஸகாத் விதியாகும்? யார் யார் ஸகாத் தரத் தகுதியானவர்கள்? ஸகாத்தை வினியோகிக்கும் முறை என்ன? ஸகாத் பெறும் உரிமை உடையவர்கள் யார் யார்? - என்பன குறித்த நெறிமுறைகளைக் காணலாம்.

ஸகாத் கடமையாவது தொடர்பாக இஸ்லாமிய ஷரீஅத்தில் இரண்டு வகைப்பட்ட சட்டங்களை நாம் பார்க்க முடிகின்றது.

ஓர் அருட்கொடையை இறைவன் உங்களுக்கு அளித்துள்ளான் என்றால் ஒன்று அது உங்களுக்கு பயன்பட வேண்டும் இல்லை என்றால் சமூகத்திற்கு பயன்பட வேண்டும். இரண்டும் இல்லாமல் வெட்டியாக அதனை வைத்திருந்தீர்கள் என்றால் - தனிப்பட்ட பயன்பாட்டிலும் இல்லை, சமூகப் பயன்பாட்டிலும் இல்லை என்றால் - அப்பொருளின் உண்மையான சந்தை மதிப்பிற்கு நீங்கள் ஸகாத் கொடுத்தாக வேண்டும்!.

(1) வணிகப் பொருட்கள்

வியாபாரக் கொடுக்கல்-வாங்கல் செய்வதற்காக நாம் விலை கொடுத்து வாங்கியுள்ள பொருட்கள் அல்லது ஏற்கனவே நம்மிடம் இருந்து பிறகு வியாபாரம் செய்வதற்கென நாம் ஒதுக்கி வைத்துள்ள பொருட்கள் ‘வணிகப் பொருட்கள்’ என வழங்கப்படும்!.

ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்ட வியாபாரங்களில் ஈடுபடுத்தப் பட்டுள்ள அனைத்து வகையான பொருட்கள் மீதும் ஸகாத் கடமையாகும். வியாபாரப் பொருட்களில் ஸகாத் கடமையாகாத பொருட்களோ விதி விலக்குகளோ இல்லை!.

(2) வணிக, வியாபாரத்தில் ஈடுபடுத்தப்படாத வேறுவகைப் பொருட்கள்

கொள்முதல் - விற்பனையோடு தொடர்பற்ற பொருட்கள். இத்தகைய வணிகமற்ற பொருட்கள், சொத்துக்களின் எல்லா வகைகள் மீதும் ஷரீஅத் ஸகாத்தை கடமையாக்குவதில்லை!. மாறாக, குறிப்பிட்ட சில வகைப் பொருட்கள் மீது மட்டுமே ஸகாத் கடமையாகின்றது. அவையாவனஃ

(அ) பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் உலோகங்களில் இரண்டு உலோகங்கள் - தங்கள் மற்றும் வெள்ளி!.

பூமியில் சுரங்கங்களைத் தோண்டி வெட்டி எடுக்கப்படும் தாதுப் பொருட்கள் உலோகங்கள் என அழைக்கப்படுகின்றன!. அவை கிடைக்கின்ற அளவையொட்டி விலைமதிப்பு பெறுகின்றன. குறைவாகவும் அரிதாகவும் கிடைக்கின்ற உலோகங்கள் மிகவும் விலை மதிப்பு உடையதாக இருக்கின்றன. இரும்பும் ஓர் உலோகம் தான்!. ஆனால், அது ஏராளமாகக் கிடைப்பதால் அதற்கு விலை யில்லை!.

தங்கத்தை விடவும் விலை மதிப்புடைய உலோகங்கள் எல்லாம் இருக்கத்தான் செய்கின்றன. வெள்ளைத்தங்கள் என வழங்கப் படுகின்ற பிளாட்டினம், தங்கத்தை விடவும் விலை மிகுந்தது!.

அதேபோன்று, பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் உலோகம் அல்லாத வைரம் போன்ற கற்கள் பொன்னைவிடவும் பெருமதிப்பு உடையவை!. பல மடங்கு விலை மிகுந்தவை!. ஆனாலும் ஷரீஅத்,

தங்கத்திற்கும் வெள்ளிக்கும் மட்டும்தான் ஸகாத்தை கடமையாக்கி உள்ளது.

உலகளாவிய அளவில் அணிகலன்களாகவும் ஆபரணங்களாக வும் பணமாற்றை நிர்ணயிக்கும் மதிப்பாகவும் இன்றைக்கும் தங்கம்தான் இருந்து வருகின்றது!.

(ஆ) கால்நடைகள். அவற்றிலும் குறிப்பாக,

(1) ஒட்டகங்கள்

(2) ஆடுகள்

(3) எருது, பசு, எருமைகள் முதலியன.

(இ) வேளாண்மை விளைச்சல் பொருட்கள். நெல், கோதுமை, சோளம் போன்ற பயிர்கள், பேரீச்சை மற்றும் திராட்சை போன்ற உலர் கனிகள்

- இவற்றிற்கான ஸகாத், *உஷ்ரு* (பத்திலொரு பாகம்) எனப்படு கின்றது.

(ஈ) புதையல் மற்றும் சுரங்கங்களில் இருந்து கிடைக்கும் பொருட்கள்.

குறுந்தொகைஃ குறைந்தபட்சம் இவ்வளவு மதிப்புடைய பொருட் கள் ஓர் ஆண்டுக்கும் மேலாக கைவசம் இருந்தால்தான் ஸகாத் கடமையாகும் என ஒரு மதிப்பை ஷரீஅத் நிர்ணயித்துள்ளது. ‘நிசாப்’ என அரபியில் அது வழங்கப்படுகின்றது. தமிழில் நாம் அதனை ‘குறுந்தொகை’ எனக் குறிப்பிடலாம். (குறைந்தபட்ச நிர்ணயத் தொகை எனப்பொருள்!).

1. வியாபாரப் பொருட்கள்

ஏற்கனவே கண்டது போல, எல்லா வகை வியாபாரப் பொருட்கள் மீதும் ஷரீஅத் ஸகாத்தை கடமையாக்குகின்றது. தங்கள், வெள்ளி வியாபாரம், (அனுமதிக்கப்பட்ட) கால்நடை வியாபாரம், முத்து வைர வியாபாரம், புத்தக வியாபாரம், எண்ணெய் உப்பு வியாபாரம் என்று நீங்கள் செய்வது எந்தவகையான வியாபாரமாகவும் இருக்கலாம்!. ஏன்? கறிவேப்பிலை வியாபாரமாகக் கூட இருக்

கலாம். வியாபாரப் பொருட்களில் ஸகாத் தரத் தேவையான குறுந் தொகை (நிசாப்) என்பது வெள்ளிக்கான குறுந்தொகை அளவே ஆகும்!. அதாவது 52 $^{1/2}$ தோலா அல்லது 612 கிராம்!.

612 கிராம் வெள்ளியின் பெறுமானத்தின் அளவோ அல்லது அதற்கு அதிகமாகவோ வியாபாரப் பொருட்கள் இருந்தால் ஆண்டுக்கொரு முறை கணக்கிட்டு ஸகாத் வழங்கியாக வேண்டும். விற்பனையினால் கிடைத்த லாபம் ரொக்கமாகவோ கையிலோ வங்கிக்கணக்கிலோ இருந்தால் அதனையும் சேர்த்துக் கணக்கிட வேண்டும்!.

இங்கே நாம் வியாபாரம் என்றால் என்ன? தொழில் என்றால் என்ன? என்பதைக் கொஞ்சம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். வியாபாரம் என்பது ஒரு தொழில். அதேசமயம் எல்லா தொழில்களும் வியாபாரம் ஆகாது. ஒருவர் மளிகைக்கடை வைத்திருக்கின்றார். அவர் செய்வது வியாபாரம். ஒருவர் வாடகை சைக்கிள் கடை வைத்திருக்கின்றார். இவர் செய்வது வியாபாரம் அல்ல!.

வாடகை சைக்கிள் கடை வைத்திருப்பவர்கள், வாடகைக்கு வீடுகளை விடுபவர்கள் போன்றோர் மீதெல்லாம் ஸகாத் கடமை யாகாதா? என்றொரு கேள்வி எழுகின்றது.

மனிதன் தனக்குத் தேவையான வருமானத்தை பல்வேறு வழிகளில் தேடிக் கொள்கின்றான். தான் ஈட்டிய பொருளை பல்வேறு வகை களில் முதலீடு செய்து கொள்கின்றான். மனிதனுடைய எல்லா வகையான செல்வத்தின் மீதும் ஷரீஅத் ஸகாத்தை கடமையாக்க வில்லை!. இதனை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம்.

தங்கத்தின் மீதென்னவோ ஸகாத் கடமையாகின்றது. ஆனால் அதைவிட பெருமதிப்பு வாய்ந்த வைரங்களின் மீது ஸகாத் கிடையாது. சமூசத்தில் செல்வச் சுழற்சியை முறைப்படுத்துவதற்காக சில குறிப்பிட்ட பொருட்கள் மீது மட்டும் ஸகாத் கடமையாக்கப் பட்டுள்ளது!.

இனப்பெருக்கத்திற்காக வளர்க்கப்படும் ஆட்டு மந்தைகள் மாட்டு மந்தைகள் மீது ஸகாத் கடமையாகின்றது!. அதேசமயம், பாலுக் காகவோ உழவுத் தொழிலுக்காகவோ வளர்க்கப்படும் கால்நடைகள்

மீது ஸகாத் கடமையாவதில்லை!.

வைரம், மாணிக்கம் போன்ற கற்களை தனிப்பட்ட பயன் பாட்டிற்காக வைத்திருந்தால் ஸகாத் கடமையாகாது. ஆனால் அவற்றையே நீங்கள் வியாபாரமாகச் செய்தீர்கள் என்றால் ஸகாத் கடமை ஆகிவிடும்!.

அதேபோல, பூமியில் விளையும் அனைத்துப் பொருட்களின் மீதும் ஸகாத் கிடையாது. புல் வகைகள், காய்கறிகள், கீரை வகைகள் மற்றும் மூங்கில் போன்றவற்றின் மீது ஸகாத் கிடையாது. காய் கறிகள், கீரை வகைகளை பயிர்களோடு ஒப்பிட்டுப் பார்க்க இய லாது!. காய்கறிகளையும் கீரை வகைகளையும் நெடுங்காலத்திற்கு சேகரம் செய்யவோ பதப்படுத்தி வைக்கவோ முடியாது!. ஆகை யால், காய்கறிகள் கீரை வகைகளின் விளைச்சலுக்கென்று ஸகாத் கிடையாது. எனினும் அவற்றையே உழவர் சந்தைக்குக் கொண்டு போய் விற்பனை செய்தால் விவசாயிகள் மீது விற்பனைக்குரிய ஸகாத் உண்டு!.

ஆக, கொள்முதல் மற்றும் விற்பனை நிலவும் வணிகமே வியாபாரம் எனக் கருதப்படும். வாடகை சைக்கிள் கடையோ வாடகைக்கு வீடுகளை விடுதலோ வியாபாரம் ஆகாது!. ஏனெனில், ஃபிக்ஹு மொழியில் அவை *'திஜாறத்'* ***(Merchantise)*** கிடையாது. அவை அனைத்தும் 'தொழில்கள்' அதாவது அரபியில் *'முஆமலாத்'* ***(Business)***.

தொழில் என்பதில் வியாபாரம், வேளாண்மை, ஆலை உற்பத்தி என அனைத்தும் அடங்குகின்றன. வாடகைக்கு சைக்கிள்களை விடுதல், வாடகைக்கு வீடுகளை விடுதல் போன்றவற்றைக் குறிக்க அரபியில் *'இஜாறஹ்'* ***(Rent, Leasing, Hiring Out)*** என்னும் சொல் பயன்படுகின்றது!.

வியாபாரப் பொருட்கள் மீதான ஸகாத்தைப் பற்றிக் குறிப்பிடும் நபிமொழியில் 'விற்பனை' (பைஃ) என்னும் சொல் இடம் பெற் றுள்ளது.

ஸம்றா இப்னு ஜுன்துப் ரழியல்லாஹு அன்ஹு அறிவிப்பதாவது, 'நாங்கள் விற்பனைக்கென்று வைத்துள்ள பொருட்களில் இருந்து ஸகாத்தை வழங்குமாறு எங்களுக்கு இறைத்தூதர் ஸல்லல்லாஹு

அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஆணையிட்டார்கள்'. (அபூ தாவுது)

விற்பனை ஒன்று நடைபெறும் போது பொருள் கைமாறி விடுகின்றது. வாங்குபவர், அப்பொருளுக்கு உரிமையாளர் ஆகி விடுகின்றார். வாடகைக்கு ஒரு பொருளைப் பெறுபவர் அப்பொருள் மூலமாக பயனை அனுபவிக்கின்றாரே ஒழிய, அதற்கு உரிமை யாளராக ஆகிவிடுவதில்லை!. வாடகைக்கு விட்டவர்தான் உண்மை யில் அப்பொருளுக்கான உரிமையாளராக திகழுகின்றார்!.

ஆகையினால்தான், சைக்கிள்களை வாடகைக்கு விடுவது போன்றவற்றை நாம் வியாபாரமாகக் கருத இயலாது!. வாடகைக்கு வீடுகளை விடுவதால் கிடைக்கும் வருமானம் உபரி வருமானமாக அமைந்து ஸகாத் தரத் தேவையான குறுந்தொகையை (நிசாப்-ஐ) எட்டிவிடும் பட்சத்தில் அவ்வாடகை வருமானத்திற்கு மட்டும் அவர் ஸகாத் தரலாம்!.

2) உலோகப் பொருட்கள் தங்கம் - வெள்ளி

ஒருவரிடம் நகைகளாக, ஆபரணங்களாக, பிஸ்கட்டுகளாக, பொற் காசுகளாக- எந்த வடிவத்தில் தங்கம் இருந்தாலும் ஓராண்டு கழிந்தபின், ஸகாத் கடமையாகும்!. தங்கத்துக்கு ஸகாத் தரத் தேவையான குறுந்தொகை (நிசாப்) $7^{1/2}$ தோலா ஆகும். அதாவது 88 கிராம். அதுவே வெள்ளியாக இருந்தால் $52^{1/2}$ தோலம் ஆகும். அதாவது 612 கிராம்!.

இங்கே ஒரு முக்கியமான விஷயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். பொதுவாக 88 கிராம் இருந்தால் அதாவது பத்தரை அல்லது பதினொரு பவுன் இருந்தால் ஸகாத் கொடுத்தாகவேண்டும் என நாம் கருதிக் கொண்டுள்ளோம்.

இருபது தீனார்கள், இருபது மிஸ்காப், (1 மிஸ்காப் எனில் 4.5 கிராம்) என தங்கத்திற்கான குறுந்தொகையை நிர்ணயித்து வந்துள்ள ஹதீஸ்கள் அனைத்துமே பலவீனமானவை!.

ஆகவே, ஸலஃப்புஸ் சாலிஹீன்கள் என நாம் அழைக்கும் முன் சென்ற சான்றோர் பெருமக்கள் பலரும் இதனை வலியுறுத்து வதில்லை!. இமாம் அதாஃ தாவுஸ், ஜுஹ்ரி (ரஹ்) போன்றோர்

தங்கத்திற்கான குறுந்தொகை எதனையும் நிர்ணயிப்பதில்லை!.

வெள்ளிக்கான குறுந்தொகையான ஐந்து ஊக்கியா (அதாவது 612 கிராம்) மதிப்பளவு தங்கம் இருந்தால் ஸகாத் கொடுத்துவிட வேண்டும் என்பதே இத்தகையோரின் கருத்து!.

அதாவது 612 கிராம் வெள்ளி உங்களிடம் இருந்தால் நீங்கள் ஸகாத் கொடுத்தாக வேண்டும். அதே மதிப்புள்ள தங்கம் உங்களிடம் இருந்தால் நீங்கள் ஸகாத் கொடுத்தாக வேண்டும்!. இதுதான் சரியான கருத்தாகும்.

தங்கம் மற்றும் வெள்ளிக்கான ஸகாத்தை தங்கமாகவும் வெள்ளியாகவும் கூட கொடுக்கலாம்!. அல்லது அதற்குரிய பணமாகவும் வழங்கலாம்.

ஏனைய நாணயங்கள் மற்றும் பணம் போன்றவற்றின் மதிப்பு, வெள்ளிக்கான குறுந்தொகையை எட்டிவிட்டால் ஸகாத் கடமையாகி விடும்!. அதாவது 612 கிராம் வெள்ளி வாங்கும் அளவுக்கு உங்களிடம் பணமிருந்தால் ஸகாத் கடமையாகிவிடும்!.

ஸகாத் தரவேண்டிய அளவு, இரண்டரை சதவீதம் ஆகும். நம்மிடம் புழக்கத்தில் இருக்கும் பணம் என்பது காகிதத்தாள் அல்ல!. அரசாங்கம் நிர்ணயிக்கும் அதனுடைய வாங்கும் சக்திதான் அதனுடைய மதிப்பு ஆகும்!.

3) கால்நடைகள்

மூன்று வகையான கால்நடைகள் மீது ஸகாத் கடமையாகின்றது. (1) ஒட்டகம் (2) பசு இதனோடு ஒப்பிட்டு எருமைக்கும் (3) ஆடு.

இவை இனப்பெருக்கத்திற்காக வளர்க்கப்பட வேண்டும்!. பெரும் பாலும் மேய்ந்து கொண்டு இருக்கவேண்டும்!. அப்போதுதான் ஸகாத் கடமையாகும். வீட்டில் இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்ற கால்நடைகள் மீது ஸகாத் கிடையாது.

ஒட்டகங்களுக்கான குறுந்தொகை 5.

பசுக்களுக்கான குறுந்தொகை 30.

ஆடுகளுக்கான குறுந்தொகை 40.

குதிரைகள், கழுதைகள் போன்றவற்றின் மீது ஸகாத் கிடையாது.

(குதிரைகளையும் அடிமைகளையும் பெற்றிக்கும்) ஒரு முஸ்லிம் குதிரைகளுக்காகவும் அடிமைகளுக்காகவும் ஸகாத் கொடுக்க வேண்டியது இல்லை!'. (புகாரி, முஸ்லிம், அஹ்மத், அபூ தாவுது, நஸாயி, இப்னு மாஜா, திர்மிதீ)

ஐந்து ஒட்டகங்கள் மட்டும் இருந்தால் ஓர் ஆட்டை ஸகாத்தாக கொடுக்க வேண்டும். பசுக்களோ எருமைகளோ முப்பது இருந்தால் ஒரு வயதுள்ள கன்று ஒன்றைக் கொடுக்கவேண்டும். நாற்பது ஆடுகள் இருந்தால் ஓர் ஆட்டைக் கொடுக்கவேண்டும்!.

வெள்ளி, தங்கம், கால்நடைகள் போன்றவற்றில் ஸகாத் கொடுப்பதற்கு ஆண்டொன்று பூர்த்தியாக வேண்டும் என்பது நிபந்தனை!.

இருபது தீனார்கள், இருபது மிஸ்காப், (1 மிஸ்காப் எனில் 4.5 கிராம்) என தங்கத்திற்கான குறுந்தொகையை நிர்ணயித்து வந்துள்ள ஹதீஸ்கள் அனைத்துமே பலவீனமானவை!.

ஆகவே, ஸலஃப்புஸ் சாலிஹீன்கள் என நாம் அழைக்கும் முன் சென்ற சான்றோர் பெருமக்கள் பலரும் இதனை வலியுறுத்து வதில்லை!. இமாம் அதாஃ தாவுஸ், ஜுஹ்ரி (ரஹ்) போன்றோர் தங்கத்திற்கான குறுந்தொகை எதனையும் நிர்ணயிப்பதில்லை!.

வெள்ளிக்கான குறுந்தொகையான ஐந்து ஊக்கியா (அதாவது 612 கிராம்) மதிப்பளவு தங்கம் இருந்தால் ஸகாத் கொடுத்துவிட வேண்டும் என்பதே இத்தகையோரின் கருத்து!.

அதாவது 612 கிராம் வெள்ளி உங்களிடம் இருந்தால் நீங்கள் ஸகாத் கொடுத்தாக வேண்டும். அதே மதிப்புள்ள தங்கம் உங்களிடம் இருந்தால் நீங்கள் ஸகாத் கொடுத்தாக வேண்டும்!. இதுதான் சரியான கருத்தாகும்.

ஆண்டின் துவக்கத்திலோ இறுதியிலோ கொடுக்கலாம். இடையில் ஒருவேளை பொருளின் மதிப்பில்/ அளவில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு இருந்தால் அதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை!.

அவ்வாறே, ஆண்டுக்கணக்கை சந்திர ஆண்டில் வைத்துக் கொள்ளுதல் நலம்!. சந்திர ஆண்டா, சூரிய ஆண்டா என நபிமொழிகளில் குறிப்பிடப் படவில்லை என்றபோதிலும்!.

(1) பொதுவாக, இஸ்லாமிய நடைமுறை சந்திர ஆண்டை மையப் படுத்தி உள்ளதாலும்

(2) 33 ஆண்டுகளுக்கு ஒருமுறை சந்திர ஆண்டுக்கணக்கில் ஓராண்டு அதிகரித்து விடும் என்பதாலும் சந்திர ஆண்டையே கணக்கிட வேண்டும்!.

4) வேளாண்மைப் பொருட்கள்

‘மேலும் (பந்தல்களில்) படரும் கொடிகள், படராத செடிகள் ஆகியவற்றைக் கொண்ட (விதவிதமான) தோட்டங்களையும், பேரீச்சந் தோப்புகளையும் பலவகைப்பட்ட உண்பொருள்களை அளிக்கக்கூடிய தாவரங்களையும் மற்றும் தோற்றத்தில் ஒரே மாதிரியாகவும் (சுவையில்) வேறுபட்டும் இருக்கும் ஒலிவம், மாதுளை ஆகியவற்றையும் படைத்தவன் அந்த அல்லாஹ்தான்! அவை காய்க்கும்போது அவற்றின் பலன்களை புசியுங்கள்! அவற்றின் அறுவடை நாளில் அல்லாஹ்வுக்குரிய பங்கினைக் கொடுத்து விடுங்கள்’. (அல்குர்ஆன் 6:141)

வெள்ளாமைப் பொருட்கள் அனைத்தையும் கிடங்குகளிலோ வேறு முறைகளிலோ சேகரித்து வைக்க இயலாது. சில பொருட்களையே சேகரித்து வைக்க முடியும்!.

விளைபொருட்களில் எவற்றையெல்லாம் சேகரம் பண்ணி வைக்க இயலுமோ அவற்றின் மீது தான் ஸகாத் கடமையாகும்!. உதாரணமாக, கோதுமை, சோளம், நெல் மற்றும் பருப்பு வகைகள். அவ்வாறே, கனிவகைகளில் உலர் பேரீச்சை, உலர் திராட்சை மற்றும் ஏனைய உலர் கனிகள்!.

உஷ்ரு

விளைபொருட்கள் மீதான ஸகாத், உஷ்ரு *(Ushr)* என அழைக்கப் படுகின்றது!. பத்திலொரு பாகம் என்பது இதன் பொருள்.

மற்ற பொருட்களான வெள்ளி, தங்கம், கால்நடைகள், வியாபாரப் பொருட்கள் மீதான ஸகாத்திற்கும் விளைபொருட்கள் மீதான உஷ்ருக்கும் நிறைய வேறுபாடு இருக்கின்றது. மார்க்க சட்டத் துறையில் உஷ்ருக்கென தனி தலைப்பே தரப்படுகின்றது.

✸ உஷ்ரைக் கொடுப்பதற்கு ஓராண்டு என்கின்ற நிபந்தனை எல்லாம் கிடையாது!. ஒவ்வொரு போகத்தின் போதும் உஷ்ரு கொடுக்கப்பட வேண்டும்.

✸ கடன்கள் இல்லாதிருக்க வேண்டும் என்னும் நிபந்தனை கிடையாது!. எவ்வளவு கடன்கள் இருப்பினும் அறுவடையின் போதே உஷ்ரு தனியாகப் பிரித்து வைக்கப்பட்டு விடவேண்டும்.

✸ விளைநிலத்துக்கு உரிமையுள்ளவராய் இருக்கவேண்டும் என்பதும் கிடையாது!. குத்தகைக்கு எடுத்து வேளாண்மை செய்திருந்தால் கூட உஷ்ரைக் கொடுத்தாகவேண்டும்!.

குறுந்தொகை

விளைபொருட்கள் மீது ஸகாத் தரத் தேவையான குறுந்தொகை (நிசாப்) ஐந்து வஸ்க்குகள் ஆகும்! (புகாரி, முஸ்லிம்). அதாவது 630 கி.கி.

ஸகாத் அளவு

விளைநிலத்திற்கு பாயும் நீரின் தன்மையைப் பொருத்து தரவேண்டிய ஸகாத்தின் அளவு மாறுபடுகின்றது. மானாவாரிப் பாசனமாக இருந்தால் உஷ்ரு (பத்திலொரு பாகம் 10%) பம்பு செட்டுப் பாசனமாக இருந்தால் உஷ்ரில் பாதி (இருபதிலொரு பாகம் 5%) ஸகாத்தாக தரப்படவேண்டும்.

மழைநீரை எதிர்பார்த்து அல்லது ஆற்று நீரை எதிர்பார்த்து பாசனம்

செய்தால் அது மானாவாரிப் பாசனம் எனப்படுகின்றது. நாமே கிணறு தோண்டி போர் போட்டு நீர் இறைத்து பாசனம் செய்தால் அது பம்பு செட்டு பாசனம் ஆகும்!.

'மழைநீராலோ ஆற்றுநீராலோ அல்லது தானாகப் பாயும் தண்ணீராலோ (மானாவாரிப் பாசனத்தால்) விளைபவற்றில் பத்திலொரு பாகம் உண்டு!. ஏற்றம் இறைத்து நீர் பாய்ச்சப்பட்டால் (பம்புசெட்டுப் பாசனம்) இருபதில் இரு பாகம் ஸகாத் கொடுக்கவேண்டும்!'. (இப்னு உமர்/ புகாரி, அபூ தாவுது, நஸாயி)

5) புதையல் மற்றும் சுரங்கம்

முன்னோர்களால் பூமிக்கடியில் புதைத்து வைக்கப்பட்ட செல் வங்கள், புதையல் (ரிகாஸ் - *Buried treasures*) எனவும் இறை யருளால் பூமியில் இருந்து கிடைக்கும் கனிமங்கள் சுரங்கம் (மஅ தின் - *Minarals*) எனவும் அழைக்கப்படுகின்றன!.

'இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சுரங்கத்தில் ஏற்படும் இழப்புக்கு நஷ்டஈடு தரத் தேவையில்லை. புதையல் ரிகாஸில் ஐந்தில் ஒரு பங்கு ஸகாத் உள்ளது எனக் கூறினார்கள்'. (புகாரி, முஸ்லிம்)

சுரங்கத்திற்கான ஸகாத் எவ்வளவு என்பதில் கருத்துகள் நிலவுகின்றன. தோண்டி எடுக்கப்படும் கனிமப் பொருட்கள் எது வாயினும் 20% ஸகாத் தரப்படவேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும்!.

புதையலுக்கும் சுரங்கத்திற்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உள்ளது. புதையல் என்பது எந்தவிதமான முயற்சியும் உழைப்பும் இல்லாமல் கிடைக்கக் கூடியது. அதேசமயம் சுரங்கம் தோண்டி தனிமங்களை வெளியே கொண்டு வருவது ஒரு தொழில்!. அதுவும் கஷ்டமான தொழில். இடையூறுகள், ஆபத்துகள் ஏராளம் உண்டு.

கஷ்டப்பட்டு சுரங்கம் தோண்டி லட்சக்கணக்கில் செலவு செய்த பிறகு ஒன்றும் கிடைக்காமல் போகவும் வாய்ப்பிருக்கின்றது. உயிர்ப்பலி கூட ஏற்பட்டு விடலாம்!. ஆகையினால்தான் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) சுரங்கங்களில் இருந்து இரண்டரை சதவீதம்

ஸகாத் வசூலித்துள்ளார்கள்.

பணம் படைத்தவர்களின் மீதான கடமையல்ல!

அதேபோன்று, ஸகாத் என்பது ஏதோ பணம் படைத்தவர்கள் செல்வந்தர்கள் லட்சாதிபதிகள் கோடீஸ்வரர்கள் கொடுக்க வேண்டியது. அவர்களுக்கான இபாதத் இது என நாம் தவறாக விளங்கி வைத்துள்ளோம்.

இப்போது பொதுவாக நாம் நம்பி கொண்டிருக்கின்ற கருத்தின் படியே பத்தரை பவுன் இருந்தால் ஸகாத் கட்டாயம் கொடுத்தாக வேண்டும். ஆனால் எத்தனை பேர் கொடுக்கின்றோம்? பத்தரை பவுன் கூட இல்லாத பரம ஏழைகளாகத்தான் நாம் இருக்கின்றோமா?

இரண்டாவது கருத்து சரி என ஏற்றுக் கொண்டால் 612 கிராம் வெள்ளி வாங்கும் அளவுக்கு நம்மிடம் பணம் கைவசம் இருந்தாலோ அந்த மதிப்பின் அளவுக்கு தங்கம் இருந்தாலோ ஸகாத் கொடுத்தே ஆக வேண்டும். (612 ✱ 40 = 24480)

அப்படிப் பார்த்தால் எத்தனை லட்சக்கணக்கான முஸ்லிம்கள் ஸகாத் கொடுக்க வேண்டியிருக்கும்? இப்போது எத்தனை பேர் கொடுத்து வருகின்றோம்?

குறைந்தபட்சம் இவ்வளவு தொகை இருந்தால் ஸகாத் கடமை ஆகிவிடும் என ஷரீஅத் நிர்ணயித்து வைத்துள்ளது. அதைத்தான் நாம் நிசாப் என்றும் குறுந்தொகை என்றும் சொல்கின்றோம். அந்த அளவுக்குக் கூட பணம் இல்லாத பரம ஏழைகளாகத்தான் நீங்கள் இருக்கின்றீர்கள் என்றால் உங்களுடைய மனைவியிடம் பத்து பவுன் நகை கூட இல்லை என்றால் பேசாமல் நீங்கள் ஸகாத் வாங்குவோர் பட்டியலில் உங்களுடைய பெயரை எழுதிக் கொள்ள வேண்டியது தான்!.

(அதிலும் இரண்டாவது கருத்து சரி என நீங்கள் ஏற்றுக் கொண்டால் ஒரு பவுன் ஒன்றரை பவுன் இருந்துவிட்டாலே ஸகாத் கொடுத்தாக வேண்டும்).

ஸகாத்தை இஸ்லாம் ஓர் இபாதத்தாக ஆக்கி உள்ளது!. அனைத்து

முஸ்லிம்களும் செய்வதற்காகத்தான் நிசாப் (குறுந்தொகை) நிர்ணயித்து உள்ளது!.

இதைப் பற்றி அக்கறையே செலுத்தாமல் ஸகாத் என்பது ஏதோ பணக்காரர்கள் செய்யவேண்டிய செயல் என நினைத்துக்கொண்டு அலட்சியமாக இருக்கின்றோம்.

ஸகாத் பெற உரிமை உடையவர்கள்

'இந்த தானதர்மங்களெல்லாம் ஏழைகள், வறியவர்கள், இந்த தான தர்மங்களை வசூலிக்கவும் பங்கிடவும் நியமிக்கப்பட்ட பணியாளர் கள் மற்றும் உள்ளங்கள் இணக்கமாக்கப்பட வேண்டியவர்கள் ஆகியோருக்கும் பிடரிகளை விடுவிப்பதற்கும் கடனாளிகளுக்கும் மற்றும் இறைவழியில் செலவு செய்வதற்கும் பயணிகளுக்கும் உரியனவாகும். இது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்ட கடமை யாகும்! மேலும் அல்லாஹ் யாவற்றையும் அறிந்தோனும் நுண்ணறி வாளனுமாயிருக்கிறான்'. (அல்குர்ஆன் 9:60)

(அ) ஃபக்கீர்கள்ஃ

தம்முடைய அன்றாட வாழ்வைக் கழிப்பதற்கே பிறருடைய உதவியை எதிர்பார்த்திருப்பவர்கள். பொதுவாக, தேவையுடைய அனைவரையும் இச்சொல் குறிக்கின்றது. வயதானோர், உடல் உறுப்புகளில் குறையுள்ள மாற்றுத் திறனாளிகள் போன்றோரும் தற்காலிகமாக பிறருடைய உதவியை நாடியுள்ள, ஏதேனும் ஒரு வாய்ப்பு கிடைத்தால் முன்னேறிவிடலாம் என்ற எண்ணம் உள்ளவர் களும் - உதாரணமாக, அனாதைத் குழந்தைகள், விதவைப் பெண் கள், வேலைவாய்ப்பு அற்றவர்கள், தற்காலிகமான பாதிப்புகளுக்கு ஆளாகி உள்ளவர்கள் ஆகியோரும் இதில் அடங்குவர்!.

(ஆ) மிஸ்கீன்கள்ஃ

மிஸ்கீன் என்றால் இறைத்தூதர் அளித்துள்ள விளக்கத்தின்படி, 'தன்னுடைய தேவைகளை நிறைவேற்றப் போதுமான அளவு பணமில்லாதவர். இவருக்குத் தேவை இருக்கின்றது என்று மக்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியாதவர்!. தன்னுடைய தேவை களைப் பற்றி யாரிடமும் முறையிடாதவர்!' ஆவார்.

அதாவது, தன்னுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டிய அளவு பாடுபட்டும் போதுமான பொருளைப் பெற இயலாத கண்ணியமான மனிதரே, மிஸ்கீன் ஆவார்!.

அவன் முயன்று பாடுபடுவதைப் பார்த்து அவர் தேவையற்றவர் என மக்கள் நினைத்துக் கொள்வார்கள். தன்னுடைய தன்மானம் கருதி அவர் மக்களிடம் கேட்கவும் மாட்டார்!.

(இ) பணியாளர்கள்:

ஸகாத்தை வசூலிக்கும் விநியோகிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள வர்கள்!. அவர்கள் ஸகாத் கடமையாகும் குறுந்தொகையை விட அதிகமான அளவு வசதி பெற்றிருந்தாலும் ஸகாத் பணத்திலிருந்தே தங்களுக்கான ஊதியத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

(ஈ) உள்ளங்கள் இணக்கமாக்கப்பட வேண்டியோர்:

(1) இஸ்லாமிற்கு எதிராகவும் இஸ்லாமிய நாட்டிற்கு எதிராகவும் செயல்படாதிருக்க பணம் கொடுத்து அணைபோடுதல்!. இத்தகை யோர் காஃபிர்களாகவும் இருக்கலாம்!.

(2) முஸ்லிம்களாக இருந்தும்கூட இஸ்லாமிய நலன்களுக்காக செயல்பட முன்வராத கீழ்நிலை முஸ்லிம்களிடமிருந்து வேலை வாங்கவும் இப்பணத்தைப் பயன்படுத்தலாம்!.

இத்தகையோர் இஸ்லாமிய நாட்டின் குடிமக்களாகவும் இருக் கலாம். வேற்று நாட்டுப் பிரஜைகளாகவும் இருக்கலாம். இத்தகை யோர் வசதி படைத்தவர்களாக இருந்தாலும் கூட பணம் கொடுப்ப தால் இவர்களுடைய திறமைகளை இஸ்லாமிய நலன்களுக்காக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்னும் பட்சத்தில் பணம் கொடுக்கலாம்!.

(3) புதிதாக இஸ்லாமைத் தழுவி பற்பல இன்னல்களைச் சந்தித்து எதிர் கால வாழ்க்கை பற்றி அவநம்பிக்கையோடு இருப்பவர்களும் இப்பிரிவின் கீழ் அடங்குவார்கள்!.

(உ) அடிமைகளை விடுவித்தல்:

அடிமைகளை விடுவித்தலை இது குறிக்கும்!. சிறைவாசிகளை விடுவித்தலும் பிணை (பெயில்) யில் எடுத்தலும் இதில் அடங்கும்!.

சிறைபட்டோரின் குடும்பங்களுக்கு உதவி ஒத்தாசை செய்வதும் நிதியுதவி செய்வதும் இதில் அடங்கும்!.

(ஊ) கடனாளிகள்:

கடன் சுமையில் மாட்டிக் கொண்டு தவிப்பவர்கள்!. வருமானம் ஈட்டுபவர்களாகவும் இவர்கள் இருக்கலாம், தக்க வேலை வாய்ப் பின்றி தவிப்பவர்களாகவும் இருக்கலாம்!.

(எ) இறைவழியில் செலவு:

இறைவழியில் செலவு செய்வது என்றால் இஸ்லாமிய இயக்கப் பணிகள், இஸ்லாமிய சமூக அமைப்புப் பணிகள் என்று சிலர் பொருள் கொள்கின்றார்கள். அதாவது வாள் மூலமாக, பேனா மூலமாக, பேச்சு மூலமாக செய்யப்படும் அனைத்து வகையான ஜிஹாதும் இதில் அடங்கும் என்பது அவர்களுடைய கருத்து!.

ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்தாக இது இல்லை!. போர்க்களத்தில் செய்யப் படும் ஜிஹாதுக்கான உதவியாகவும் மற்றும் தளவாடப் பொருட்களை வாங்கவும் அளிக்கப்படும் பணம் என்பதுதான் சரியாகும்!.

கிதால் ஃபீ ஸபீலில்லாஹ் என்பதற்காக மட்டுமே இது பயன்பட வேண்டும்.

(ஏ) பயணிகள்:

பயணிகளுக்கு சொந்த ஊரில் ஏராளமான வசதி இருந்தாலும் பயணத்தின் போது உதவு தேவைப்படுகின்ற சூழ்நிலையில் அவர் இருந்தால் ஸகாத் பெற உரிமை உடையவர் ஆகிறார்!.

கொடுப்பதில் தேவை கவனம்!

ஸகாத் கொடுக்கும் விஷயத்தில் மிகவும் அசட்டையாக மக்கள் நடந்து கொள்வதையும் நாம் பார்க்கின்றோம்.

(அ) முறையாக கணக்கிட்டு முழுமையாகக் கொடுக்கவேண்டும் என்னும் அக்கறையே இல்லாமல் ஏதோ குத்துமதிப்பாக கணக்கிட்டு கொடுத்து முடித்து விடுகின்றார்கள்.

(ஓர் இஸ்லாமிய நாட்டில் நாமே நமது சொத்துபத்துகளை கணக்கிட முடியாது என்பதை அறிக!. நம்மிடம் உள்ள ஒட்டுமொத்த சொத்துக்களின் பட்டியலை அரசாங்க தணிக்கையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். அவர் குறிப்பிட்டுத் தரும் தொகையை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்தியாக வேண்டும்!)

(ஆ) பட்டியலில் உள்ள எட்டு வகையறாவிற்குக் கொடுத்தால்தான் ஸகாத் கொடுத்தது கணக்கில் ஏறும்!. பட்டியலில் இல்லாத பல பேர்களுக்கு உதவி தேவைப்படலாம். கண்டிப்பாக உதவியே ஆகவேண்டிய கட்டாயத்திலும் பலபேர் இருக்கலாம்!. ஆனால், இத்தகையோருக்கு உதவி செய்வதன் மூலமாக நம்மீதான ஸகாத் கடமை நிறைவேறி விடாது!.

(இ) பட்டியலில் உள்ளவர்களுக்கே கொடுக்கும் போதும் ஸகாத் கொடுக்கும் எண்ணம் (நிய்யத்) இல்லாமல் சாதாரணமாக உதவும் எண்ணத்தோடு கொடுத்திருந்தால் அதையும் ஸகாத் கணக்கில் சேர்க்க முடியாது.

(ஈ) ஸகாத் பெறத் தகுதியுடையவர்கள் நமது பராமரிப்பின் கீழ் வருபவர்களாக இருந்துவிடவே கூடாது. அத்தகையோருக்குக் கொடுக்கும் போது அவர்கள் ‘உரியவர்களாக’ இருந்தபோதிலும் நம்முடைய ஸகாத் நிறைவேறாது. கூடப்பிறந்த அண்ணன்-தம்பிகள், அண்ணன்-தம்பிகளின் பிள்ளைகள், சிற்றப்பா, பெரியப்பா போன்றவர்கள் வறிய நிலையில் இருந்தால் அவர்களைப் பராமரிப்பது நம்மீது கடமை!. பராமரிக்கத் தவறினால் இஸ்லாமியச் சட்டங்களின் படி அது குற்றம்!. ஆகையால் இத்தகையோருக்கு ஸகாத் கொடுக்கக் கூடாது. கொடுத்தாலும் அது கணக்கில் சேராது!.

(உ) கடைசி நிபந்தனை தனித்தனி நபர்களாக ஸகாத் கொடுக்கவே கூடாது!. கூட்டாக, ஓரிடத்தில் திரட்டி தகுந்த நபர்களை இனம் பிரித்து அடையாளம் கண்டு முறையாகக் கொடுப்பதுதான் சாலச்சிறந்தது!.

கூட்டு முறை வினியோகம் பற்றி இறுதியில் விளக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்தாவது நியதியை கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டால் மேலே உள்ள மற்ற நியதிகள் தாமாகவே அடிபட்டுப் போய்விடும்!.

கேள்விகளும் பதில்களும்

ஸகாத்தைப் பற்றிய அடிப்படையான விஷயங்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் கேள்வி-பதில் வடிவத்தில் இங்கே கொடுக்கப் படுகின்றன!.

1. தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய வியாபார நிறுவனங்கள் மீது எவ்வாறு ஸகாத் கடமையாகும்?

தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்கள், தளவாடப் பொருட்கள் மீது ஸகாத் கிடையாது. ஆண்டின் இறுதியில் கையிருப்பில் உள்ள உற்பத்தி மற்றும் மூலப்பொருட்கள் மீது ஸகாத் கடமையாகும்!.

இதேபோன்று, வியாபார நிறுவனங்களில் உள்ள ஃபர்னிச்சர்கள், வாகனங்கள், கடைகள், கட்டிடங்கள் இன்னும் இவைபோன்ற பிற பொருட்கள் மீதும் ஸகாத் கடமையாகாது!. கடையில் உள்ள விற்பனைப் பொருட்கள், வங்கியிருப்பில் உள்ள ரொக்கம் போன்றவற்றின் மீதே ஸகாத் கணக்கிடப்படும்!.

அதாவது, தன்னுடைய வியாபாரத்துக்கென்று எந்தெந்த தளவாடப் பொருட்களை ஒருவர் பயன்படுத்துகின்றாரோ அவற்றுக்கு ஸகாத் கிடையாது என்பதுதான் அடிப்படை விதியாகும்!.

'நீர் இறைப்புக்கென்று உள்ள ஒட்டகைகளுக்கு ஸகாத் கிடையாது!' என நபிமொழிகள் குறிப்பிடுகின்றன.

ஏனென்றால், அந்த ஒட்டகையின் உழைப்பைப் பயன்படுத்தி விளைவித்த வேளாண்மைப் பொருட்களில் இருந்து ஸகாத் பெறப்பட்டு விட்டது. எல்லாவகையான உற்பத்திக்கான தளவாடப் பொருட்களின் நிலையையும் இதனோடுதான் ஒப்பிட்டுப் பார்க்கப்படும்!.

சில தொழில்களில் ஆண்டின் இறுதியில் கையிருப்புக் கணக்கை எல்லாம் காண முடியாது!. உதாரணமாக, செய்தித்தான் பத்திரிக்கை நிறுவனங்கள். இங்கு வருட வருமானம் கணக்கில் கொள்ளப்பட்டு ஸகாத் கணக்கிடப்படும்!.

2. தற்கால சமூக சூழலை கருத்தில் கொண்டால் எந்த எந்த பொருட்கள் சொத்துகளின் மீது ஸகாத் கடமையாகின்றது?

குறிப்பாக, கீழ்வரும் விஷங்களில்...

(i) பணம், தங்கம், வெள்ளி நகைகள், ஆபரணங்கள்

(ii) உலோக நாணகங்கள், காகிதப் பணம்

(iii) வங்கி இருப்பு, லாக்கர்களில் வைக்கப்பட்டுள்ள பொருட்கள், வாங்கியுள்ள - கடன்கள் அடமானச் சொத்துகள்

(iv) அன்பளிப்புகள்

(v) காப்பீடு பாலிஸிகள், பிராவிடெண்ட் பணம்

(vi) மாட்டுப் பண்ணை, பால்பண்ணைப் பொருட்கள், விளையாட்டுகள், காய்கறிகள், கனிகன், பூக்கள்

(vii) பழங்கால புராதனப் பொருட்கள்

(viii) வளர்ப்புத் தேனீக்கள், மலைத் தேனீக்கள் உடைய தேன்

(xi) மீன், முத்துக்கள் ஏனைய கடல் செல்வங்கள்

(x) பெட்ரோல்

(xi) ஏற்றுமதி, இறக்குமதி

(xii) பங்கு பத்திரங்கள்

ஸகாத் தரப்படி வேண்டிய பொருட்களாக ஷரீஅத் குறிப்பிடுகின்ற பொருட்களாவனஃ

(அ) விளைபொருட்கள் - அறுவடைக்குப் பிறகு

(ஆ) வெள்ளி, தங்கம் - ஆண்டின் துவக்கத்திலும் இறுதியிலும் குறுந்தொகை அளவோ அதைவிட அதிகமாகவோ இருந்தால்...

(இ) அதேபோன்று வெள்ளி மற்றும் தங்கத்துக்கு மாற்றாக உள்ள பணம்

(ஈ) இனப்பெருக்கத்திற்காக வளர்க்கப்படும் கால்நடைகள்

(உ) வியாபாரப் பொருட்கள்

(1) பணம், வெள்ளி, தங்கம் போன்றவற்றின் மீது ஸகாத் உண்டு!. ஆபரணங்களைப் பொருத்தவரை அவற்றில் அடங்கியுள்ள நிகர தங்கமே கணக்கில் கொள்ளப்படும்!. நவரத்தினங்கள் எவ்வளவு

மதிப்பு வாய்ந்தவையாக இருந்தாலும் ஸகாத் கிடையாது. நவரத்தின வியாபாரம் யாரேனும் செய்தால் மட்டும் வியாபார ஸகாத் உண்டு!.

(2) உலோக நாணயங்கள், காகிதப் பணத்திற்கு ஸகாத் உண்டு!. எவ்வளவு தங்கத்துக்கு ஈடானது என்பதைப் பொருத்துதான் காகிதப் பணமோ சேறு நாணயங்களோ மதிப்பைப் பெறுகின்றன.

(3) வங்கிகளில் பணத்தைப் போட்டு வைத்திருந்தாலும் அறக் கட்டளைகளில் (டிரஸ்ட்டுகளில்) பணத்தை முதலீடு செய்திருந் தாலும் அதற்கு ஸகாத் உண்டு!. லாக்கர்களில் உள்ள பொருட் களுக்கும் இதுவே சட்டமாகும்!.

அறக்கட்டளைகளில் செய்த முதலீடு என நாம் குறிப்பிட்டுள்ளதை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். அறக்கட்டளைகள் நடை முறையில் எவ்வாறு செயல்படுகின்றன என்பது யாவரும் அறிந்த உண்மையே!.

அவ்வாறு இல்லாமல் உண்மையிலேயே வக்ஃப் செய்யப்பட்டிருந் தால் ஸகாத் கிடையாது!. ஸகாத் என்ன? அதில் அவருக்கு உரிமையே கிடையாது!!.

ஒரு பொருளை வக்ஃப் செய்துவிட்டால் அதாவது டிரஸ்ட்டுக் கென்று ஒதுக்கிவிட்டால் அதில் தானம் வழங்கியவரே டிரஸ்ட்டியாக ஆக முடியாது!. எக்காரியத்திற்காக தொகை ஒதுக்கப்பட்டுள்ளதோ அக்காரியத்தை செய்ய தகுதியும் அருகதையும் படைத்தவர்தாம் பொறுப்பாளராக ஆக முடியும்!!.

தனிப்பட்ட தேவைகளுக்கு கடனை வாங்கியிருந்து அது செல வளிந்து போயிருந்தால் அதற்கு ஸகாத் கிடையாது!.

கடன் வாங்கியவர் ஓராண்டு முழுக்க அதனை செலவு செய்யாமல் அப்படியே வைத்திருந்தால் அதற்கு ஸகாத் உண்டு!.

வாங்கிய கடன் தொகையை வியாபாரம் வணிகத்தில் ஈடுபடுத்தி இருந்தால் ஸகாத் உண்டு!. ஏனெனில், அப்பணத்திலிருந்து கிடைக் கும் ஆதாயத்தை அவர் அனுபவித்து வருகின்றார், அல்லவா?

அத்தொகை குறுந்தொகை (நிசாப்) அளவோ அதைவிட அதி கமோ இருந்தால் அதற்கு ஸகாத் உண்டு!.

கடன் தொகையை வியாபாரத்தில் முதலீடு செய்திருந்தால் வியாபார ஸகாத் தொகையில் அதுவும் சேர்த்துக் கொள்ளப்படும். கழிக்கப்பட மாட்டாது!.

இப்போதெல்லாம் கடன் பொதுவாக வியாபார வளர்ச்சிக்காகவே வாங்கப்படுகின்றது என்பதை நாம் நினைவில் இருத்த வேண்டும். சொந்த முதலீடு குறைவாகவும் பிறரிடமிருந்து திரட்டிய கடன்களை அதிக அளவில் கொண்டும் பற்பல தொழில்கள் தொடங்கப் படுகின்றன.

இலட்சக்கணக்கான முதலீட்டில் தொடங்கப்படும் இத்தகு தொழில் களில் புழங்கும் கடன்களை கழித்துவிட்டுத்தான் ஸகாத்தைக் கணக்கிட வேண்டும் என்றால் ஸகாத்தே கடமை ஆகாது!.

குறிப்பிட்டதொரு சமூகச் செல்வத்திலிருந்து ஆதாயம் பெறு பவர்தாம் அதற்கான ஸகாத்தைச் செலுத்த வேண்டும்!. அவர்மீது அது கடமையும் கூட!!.

எனக்கு இவ்வருடம் பத்து லட்சம் லாபம்தான். இருந்தாலும் என்ன செய்ய? வங்கியில் எனக்கு பதினைந்து லட்சம் ரூயாய் கடன் உள்ளதே! என்றெல்லாம் யாரும் கூறமுடியாது.

வசூலாவது சந்தேகம் என்னும் நிலையிலுள்ள கடன்களைப் பொருத்தவரை எப்போது வசூலாகின்றதோ அப்போது ஓராண் டிற்கான ஸகாத்தைச் செலுத்தினால் போதும்!.

அடைமானம் அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ள சொத்துகள் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளனவோ அவரிடமிருந்தே ஸகாத் வசூலிக்கப்பட வேண்டும்!.

உதாரணமாக, அடைமானம் பெற்று பணம் கொடுத்தவரின் கட்டுப்பாட்டில் நிலம் இருந்தால் உஷ்ரு அவரே செலுத்தியாக வேண்டும்.

(4) குறுந்தொகையை விட அதிக மதிப்புடைய பொருட்கள் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டிருந்தால் ஓராண்டு சென்றபிறகு, அதனைப் பெற்றவரே அதற்குரிய ஸகாத்தைக் கொடுக்கவேண்டும்!.

(5) காப்பீடோ, பிராவிடெண்ட் பணமோ கட்டாயமாக வசூலிக்கப் பட்டால் அது ‘வராக்கடன்’ நிலைமைக்கு ஒப்பானதாகும்!. அதாவது

கையில் கிடைக்கும்பொது ஓராண்டிற்கான ஸகாத்தைச் செலுத்தினால் போதுமானது!.

ஒருவர் தாமாக விரும்பி இவற்றில் பணம் செலுத்துகின்றார் என்றால் ஒவ்வோர் ஆண்டின் முடிவிலும் எவ்வளவு பணம் சேர்ந்து உள்ளதோ அதற்குரிய ஸகாத்தை அவர் கொடுத்தாகவேண்டும்!. இந்தப்பணமும் காலக் கெடுவுக்கு முன்பாக அவர் கையில் கிடைக்காது என்றிருந்த போதிலும் அவராக விரும்பி இவற்றைச் செலுத்திவருவதால் ஸகாத்திலிருந்து அவர் விடுபட இயலாது!.

(6) மாட்டுப்பண்ணை, பால் பண்ணை போன்றவை உற்பத்திப் பொருட்களாகக் கருதப்படும்!. இவற்றிற்கு ஸகாத் கிடையாது. இருப்பினும் பால் பண்ணையின் உற்பத்திப் பொருட்கள் மீது தொழிற்சாலை உற்பத்திப் பொருட்களைப் போன்ற ஆண்டில் இறுதியில் ஸகாத் கணக்கிடப்பட வேண்டும்!.

விளைபொருட்களில் சேகரம் செய்துவைக்கத் தகுதியானவை மீது பத்து சதவிகிததோ அல்லது ஐந்து சதவிகிதமோ ஸகாத் கடமையாகும்!. கனிகளின் நிலையும் இவற்றைப் போன்றதுதான். (உதாஃ உலர் திராட்சை, உலர் கனிகள்)

மானாவாரிப் பாசனம் என்றால் 10% பம்புசெட்டு அல்லது நீர் இறைப்புப் பாசனம் என்றால் 5%.

காய்கறிகள், பூக்கள், பழங்கள் போன்றவற்றை ஸ்டாக் செய்து வைக்க முடியாது. எனவே இவற்றின்மீது உஷ்ரு கிடையாது!.

இருந்தபோதிலும் விவசாயியே நேரடியாக இவற்றை விற்பனை செய்கிறார் என்றால் வியாபாரத்திற்குரிய $2^{1/2}$ ஸகாத் உண்டு!.

பொதுவாக, வியாபாரம், வணிகம் செய்வோர் தாங்களாகவே தங்கள் மீதான ஸகாத்தை இனங்கண்டு கொள்ளலாம். ஏனெனில், ஆப்பிள் போன்ற கனிவர்க்கங்களை இப்போதெல்லாம் ஸ்டாக் செய்து விற்பனை செய்கிறார்கள். வேறுபல பழங்களும் ஸ்டாக் செய்யப்படுகின்றன. ஆகவே, இஸ்லாமின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு நாமாகவே நம் மீது ஸகாத் கடமையாகி உள்ளதா? இல்லையா? என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

(7) பெருமதிப்பு வாய்ந்த புராதனப் பொருட்களை நினைவுச்

சின்னங்களாக வீட்டில் பராமரித்து வந்தால் ஸகாத் கிடையாது. விற்பனைக்குக் கொண்டு வந்துவிட்டால் வியாபார ஸகாத் கொடுத்தாக வேண்டும்!.

(8) தேன் மீது ஸகாத் உண்டா, இல்லையா என்பது குறித்து கருத்துகள் நிலவுகின்றன. தேனை விற்பனை செய்துவந்தால் வியாபார ஸகாத் கொடுத்துவிட வேண்டும்!.

(9) மீனுக்கு ஸகாத் கிடையாது!.

(10) இறக்குமதியின் மீது உமர் இப்னு கத்தாப் காலத்தில் வசூலிக்கப்பட்ட தொகை உண்மையில் ஸகாத் கிடையாது. இஸ்லாமிய நாட்டிலிருந்து வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் மீது விதிக்கப் பட்டு வந்த தீர்வைக்கு பதிலாகவே அது வசூலிக்கப்பட்டது.

பொதுவாக ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்!. உபரி வருமானம் வரும் வகையில் நாம் முதலீடு செய்துள்ளவற்றிற்கு கண்டிப்பாக ஸகாத் கொடுத்தே ஆகவேண்டும்!.

பங்குப் பத்திரங்களில் நீங்கள் முதலீடு செய்திருக்கலாம்!. ஏதேனும் நிறுவனத்தில் பார்ட்னராக *(Sleeeping Partner)* சேர்ந்திருக்கலாம். இத்தகு வருமானங்களை எல்லாம் ஆண்டுதோறும் முறையாகக் கணக்கிட்டு ஸகாத் கொடுத்துவிடுவதே சாலச்சிறந்தது!.

3. வாடகைக்கு விடப்படும் கட்டிடங்கள் நகைகள் போன்றவை மீதும் வாடகைக்கு ஓட்டப்படும் கார்கள் மீதும் ஸகாத் எவ்வாறு விதிக்கப்படும்?

வாடகைக்கு விடப்படும் பொருட்களின் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தின் மீது $2^{1/2}$% ஸகாத் வசூலிக்கப்படும்!.

வாடகைக்கு அமர்த்தப்படும் ஒட்டகைகளுக்கு ஸகாத் வசூலிக்கப் பட்டதை மதீனாவில் நான் பார்த்துள்ளேன் என லைஸ் இப்னு ஸஅத் அறிவிக்கிறார். (கிதாபுல் அம்வால்)

4. வசூலிக்கப்படும் ஸகாத் தொகையை வான்மறை குர்ஆன் குறிப்பிடும் எட்டு வகைகளிலுமே செலவு செய்ய வேண்டுமா? அல்லது ஏதேனும் ஒன்றிற்கு முக்கியத்துவம் தரலாமா?

குர்ஆன் குறிப்பிடும் வகைகள் அனைத்திலும் செலவு செய்தாக வேண்டும் என்னும் கட்டாயம் கிடையாது!. முஸ்லிம் மஹல்லாவில் ஸகாத் கமிட்டி மூலம் கூட்டமைப்பாக வசூல் செய்யும்போது, எந்த எந்த பிரிவினருக்கு எவ்வளவு எவ்வளவு என அந்த கமிட்டி முடிவு செய்கின்றதோ அதன்படி செலவிடலாம்!.

அல்லது ஏதேனும் ஒரு பிரிவினருக்கு உடனடியாக உதவி செய்தாக வேண்டும் என்னும் நிலையிருந்தால் முழுத்தொகையையும் அதற்கே செலவிடலாம்!.

5. ஸகாத் பெற உரிமையுடையவர்கள் எந்த எந்த சமய சூழ்நிலைகளில் அதனைப் பெறத் தகுதியானவர்களாக ஆகின் றார்கள்?

ஃபக்கீர்களும் மிஸ்கீன்களும் சொல்லுக்கேற்ப ஏழை - எளிய வர்களாக இருக்கின்ற நிலையில் ஸகாத்தைப் பெறலாம்!.

பணியாளர்களும் உள்ளங்கள் இணக்கமாக்கப்பட வேண்டியவர் களும் ஸகாத் தரக்கூடிய அளவுக்கு வசதி வாய்ப்பு பெற்றிருந்தாலும் ஸகாத் பணத்திலிருந்து பெற்றுக் கொள்வார்கள்!.

அடிமை, அடிமையாக இருப்பதினாலேயே அவர் விடுதலைக்கு ஸகாத் செலவிடப்படவேண்டும்!.

தன்னுடைய முழுக் கடனையும் அடைத்தபிறகு, ‘குறுந் தொகைக்கு’ கூட உரிமையாளராக இருக்கமாட்டார் என்னும் நிலை யில் கடனாளி ஸகாத் பெறத் தகுதியுடையவராகின்றார்!.

இறைவழியில் போரிடக்கூடியவர் ஸகாத் தருமளவுக்கு வசதி பெற்றிருந்த போதிலும் அவருக்கான போர்க்கருவிகளை ஸகாத் தொகையின் மூலம் தருவித்துக் கொடுக்கலாம்!.

பயணத்தின் போது நிர்க்கதியான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால் எத்தகைய பயணியும் ஸகாத் பெறத் தகுதியானவராக மாறிவிடு கின்றார்!.

பணம் படைத்தவர்களும் உழைத்துச் சாப்பிடும் அளவுக்கு உடல் வலிமை படைத்தவர்களும் ஸகாத் பெறத் தகுதி அற்றவர்கள்!. (நஸாயி, அபூ தாவுது)

அண்ணல் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடைய ஹாஷிம் குலத்தைச் சேர்ந்தவர்களும் அவர்களது வம்சா வழியினரும் ஸகாத் பெறலாகாது!. ஸகாத் மட்டுமல்ல, சதக்காக்களையும் பெறக் கூடாது!.

பள்ளிவாசல்களில் ரமழான் நோன்புக்காக காய்ச்சப்படும் கஞ்சியைக் கூட தங்களை ஹாஷிம் வம்சத்தினராகக் கருதுவோர் குடிக்கக்கூடாது!.

ஹாஷிம் குலத்தினர் **சையத்** என அழைக்கப்படுவதுண்டு!. ஆனால், இன்று எத்தனை எத்தனையோ பேர் தங்கள் பெயர்களுக்கு முன்னால் சையத் என்னும் அடைமொழியைத் தாங்கியுள்ளார்கள். இவர்களில் யார் யாரெல்லாம் உண்மையிலேயே பனூ ஹாஷிம்கள் என்பதை யாராலும் கண்டுபிடிக்கவே முடியாது!.

அவ்வாறே, முஸ்லிம் அல்லாத காஃபிர்களுக்கும் ஸகாத் பணத்தைக் கொடுக்கக்கூடாது!.

‘உங்களில் பணக்காரர்களாக உள்ளவர்களிடமிருந்து பெற்று உங்களில் ஏழைகளாக உள்ளவர்களுக்கு அளிக்கப்படும்!’ என்பது தான் ஸகாத்தைப் பற்றிய ஆணை!. இலக்கணம்!.

மற்றபடி, முஸ்லிம் அல்லாதோருக்கு ஸகாத் தவிர்த்த ஏனைய தான தர்மங்களை / ஸதக்காக்களை தாராளமாக வழங்கலாம். வழங்க வேண்டும் என ஷரீஆ கட்டளையிடுகின்றது!.

மனைவிக்கும் தாய் தந்தையருக்கும் குழந்தைகளுக்கும் ஸகாத் வழங்கக் கூடாது!. ஏனென்றால் இவர்களைப் பராமரித்துப் பாது காப்பது ஒவ்வோர் இறைநம்பிக்கையாளர் மீதும் கட்டாயக் கடமை யாகும்!.

அதேசமயம், ஒரு பெண் தன்னுடைய ஸகாத்தை தனது கண வனுக்கு தாராளமாகக் கொடுக்கலாம்!. கணவனைப் பராமரிப்பது மனைவியின் பொறுப்பல்ல என்பதே காரணம்!.

அண்ணன் தம்பிகள், அவர்களது குழந்தைகள், சிற்றப்பா, பெரியப்பாக்கள் போன்றோருக்கும் ஸகாத் கொடுக்க முடியாது!. இவர்களும் பராமரிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியலில் இடம் பெறுவதே காரணம்!.

நெருங்கிய உறவினர்களில் யாரேனும் ஸகாத் பெறத் தகுதி யானவர்களாக இருந்தால் அவர்களுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும்!. உறவினர்களை புறக்கணித்துவிட்டு மற்றவர்களுக்கு அளிப்பது வரவேற்கத் தகுந்த செயல் அல்ல!.

6. ஸகாத்தைத் தராத நிலையில் ஒருவர் மரணித்து விட்டால் எவ்வாறு வசூலிப்பது?

ஒருவர் இறந்துவிட்டாலும் அவருடைய சொத்திலிருந்து ஸகாத் கொடுக்கப்பட வேண்டும்!. ஒருவர் இறந்துவிட்டால் முதலில் அவருடைய கடன்கள் அடைக்கப்பட வேண்டும். பிறகு இறைவனுக்கும் சமூகத்திற்கும் அவர் தரவேண்டிய அவர் குறிப்பிட்டிருந்த வசிய்யத் என்னும் மரண சாசனம் நிறைவேற்றப்பட வேண்டும்!. அதன்பிறகே, சொத்து பாகம் பிரிக்கப்பட வேண்டும்!.

கூட்டுமுறை வினியோகம்!

ஒவ்வோர் இறைவழிபாடும் நிறைவேற்றும் முறையைப் பொருத்து பல்வேறு வடிவங்களைப் பெறுகின்றது. அவ்வகையில் வழிபாடுகளில் தொழுகையும் ஸகாத்தும் வேறுபட்டுத் திகழுகின்றன!.

ஒவ்வொரு தனிநபர் மீதும் தொழுகை கடமையாகின்றது. அதேசமயம் ஒட்டுமொத்த சமூகத்தின் மீதும் தொழுகை கடமையாகின்றது!.

நிறைவேற்றும் விதத்தைப் பொருத்த வகையில் - இவ்வாறாக - தொழுகை இரண்டு வேறுபட்ட கோணங்களைப் பெற்றுத் திகழுகின்றது!.

ஏறக்குறைய அதே போன்றுதான் ஸகாத்தும் இரண்டு கோணங்களைப் பெற்றுள்ளது. தனி நபர்கள் மீது ஸகாத் கடமையாகின்ற அதே சமயம் சமூகத்தின் மீதும் கடமையாகவே செய்கின்றது!.

வீட்டில் தொழுது கொண்டாலும் தொழுகை என்னும் கடமை நிறைவேறிவிடும்!. ஆனாலும் ஷரீஅத் அதை வரவேற்பதில்லை என்பதோடு வன்மையாக கண்டிக்கவும் செய்கின்றது. இறையில்லங்களில் தொழுகை நிலைநாட்டப்படவேண்டும் என்பதே ஷரீஅத்தின் குறிக்கோள்!. ***இகாமத்துஸ் ஸலாத்*** என்னும் சொற்பிரயோகம்

அதனையே குறிக்கின்றது!.

ஸகாத்தின் நிலையும் இதைப் போன்றதே!. தனிநபர்கள் மீதான தொழுகையைப் பற்றியோ தனிநபர்கள் மீதான ஸகாத்தைப் பற்றியோ வான்மறை குர்ஆன் பேசவே இல்லை என்றும்கூட தெரியமாகச் சொல்லாம்!.

உங்கள்மீது கடமையான ஸகாத்தைக் கொடுத்துவிட்டால் பொறுப்பு முழுமையாக நிறைவேறி விடும் என்று சொல்லிவிட முடியாது!.

இகாமத்துஸ் ஸலாத் எனும் சொல் எந்த அர்த்தத்தைத் தரு கின்றதோ முழுக்க முழுக்க அதே அர்த்தத்தையே ***ஈதாஉஸ் ஸகாத்*** என்னும் சொல்லும் தருகின்றது!.

அதை விரிவாக்கினோம் என்றால் கூட்டு முறையில் ஸகாத்தை நிறைவேற்றுவார்கள் என்னும் பொருள் கிடைக்கின்றது.

ஒட்டுமொத்த அளவில் ஓர் இபாதத்தை நிறைவேற்றுவதற்கு சமூக வடிவமும் கட்டமைப்பும் தேவைப்படுகின்றது!. இஸ்லாமிய சமூக அமைப்போ இஸ்லாமிய ஆட்சியோ இருந்தால் அதன்மீதான முதல் கடமையே இவற்றை முறைப்படி நிறைவேற்றுவதுதான்!.

கீழ்வரும் இறைமறை வசனத்தை சற்று ஆழமாக வாசித்துப் பாருங்களேன்...

الَّذِينَ إِنْ مَكَّنَّاهُمْ فِي الْأَرْضِ أَقَامُوا الصَّلَاةَ وَآتَوُا الزَّكَاةَ

وَأَمَرُوا بِالْمَعْرُوفِ وَنَهَوْا عَنِ الْمُنْكَرِ

‘அவர்கள் எத்தகையவர்களெனில், நாம் அவர்களுக்கு பூமியில் ஆட்சியதிகாரத்தை வழங்கினால் அவர்கள் தொழுகையை நிலை நிறுத்துவார்கள்; ஜகாத் வழங்குவார்கள். மேலும், நன்மை புரியுமாறு ஏவுவார்கள்; தீமையிலிருந்து தடுப்பார்கள்’. (அல்குர்ஆன் 22:41)

இஸ்லாமிய ஆட்சியமைப்பை ஏற்படுத்துவதற்கு பாடுபடுவதும் அதற்கான தொடர்முயற்சிகளை மேற்கொள்வதும் இறைநம்பிக்கை யாளர்களின் மீதான கடமையாகும்!. அம்முயற்சியில் அவர்கள்

வெற்றிபெறும்போது முதலில் இவ்விரண்டையும் முறைப்படி செயற்படுத்தவே முனைவார்கள். இஸ்லாமிய சமூக அமைப்பை தாங்கிப் பிடிக்கும் தூண்களில் இவ்விரண்டும் தான் ஆதாரத் தூண் களாகத் திகழுகின்றன!.

ஆட்சியமைப்பு இல்லாத பட்சத்திலும் கூட்டு முறையில் இக்கடமையை நாம் நிறைவேற்றியே தீரவேண்டும்!. இஸ்லாமிய சமூக அமைப்பு உயிரோடு இருக்கின்றது என்பதற்கு இதுதான் அடையாளம்!.

உயிர் வாழ்க்கைக்கே ஆதார நாடியாகத் திகழும் ஓர் அம்சத்தைத் தூக்கி தூர எறிந்துவிட்டால் அப்புறம் நாம் முஸ்லிம்கள் என்று சொல்வதற்கே அருகதை அற்றவர்களாக ஆகிவிடுவோம்!.

ஆகையால், நம்முடைய பள்ளிவாசல்களில் ஸகாத் கமிட்டிகளைத் தோற்றுவிக்க வேண்டும்!. மஹல்லாவாசிகளிடம் இருந்து முறைப் படி ஸகாத் தொகையைத் திரட்டி யாருக்கு அத்தொகை முறையாகப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களிடம் முறையாகப் போய்ச் சேரும்படி செய்ய வேண்டும்!. ஒவ்வொரு பள்ளிவாசல் நிர்வாகிகள் மீதும் இது கட்டாயக் கடமையாகும்!.

பணத்தைக் கொடுத்துவிடுவது என்னும் ஒரே ஓர் அம்சத்தை மட்டும் கொண்டதாக ஸகாத் அமைக்கப்படவில்லை!. வசூலிப்பது, விநியோகிப்பது என பல்முனைகளைக் கொண்டதாக விளங்கு கின்றது. யார் யாருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதும் தெள்ளத்தெளிவாக விளக்கப்பட்டுள்ளது!.

ஆக, கூட்டு முறையில் முயற்சி செய்து ஸகாத்தைப் பெற்று தக்கோர் தகுந்தோருக்கு முறைப்படி விநியோகம் செய்யாத பட்சத்தில் சமூக வழிகாட்டிகளும் இறை இல்லப் பொறுப்பாளர்களும் குற்றவாளி களாகி விடுவார்கள்!.

கூட்டுமுறையில் நாம் ஒழுங்காக ஸகாத்தைக் கொடுக்காததால் ரமழான் மாதங்களில் ஏழை எளிய மக்கள் கையேந்திக் கொண்டு தெருத்தெருவாக அலையும் அவல நிலையைக் காண முடிகின்றது!. முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல, இஸ்லாமுக்கே இது அவமானம்!!.

எப்போது நிறைவேற்றுவது?

பொதுவாக ரமழான் மாதத்தில் ஸகாத் கொடுப்பதை நாம் வழக்கமாக்கி வைத்திருக்கின்றோம். ரமழான் மாதத்தில் நிறைவேற் றப்படும் இபாதத் களுக்கு கூடுதல் நன்மைகள் கிடைக்கும் என்னும் ஒரு காரணத்திற்காக கடமையான ஓர் இபாதத்தை காலந்தாழ்த்தி தள்ளிப்போடுவது சரியா? என நாம் சற்றே யோசித்துப் பார்க்க வேண்டும்!.

வியாபாரமோ, வணிகமோ அல்லது வேலையோ வருமானத்தை கணக்கிட பொதுவாக ஒரு காலத்தை நிர்ணயித்து வைத்துள்ளோம். மார்ச் அல்லது அக்டோபர் என என்றைக்கு நாம் கணக்கு பார்க்கின் றோமோ அப்போதே ஸகாத்தையும் கொடுத்துவிடுவதே சிறப் பானது!.

கணக்கிடும்போது சந்திர ஆண்டையே கருத்தில் கொள்ள வேண்டும். சூரிய ஆண்டை கணக்கிடக் கூடாது!.

وَجَعَلَنِي مُبَارَكًا أَيْنَ مَا كُنتُ وَأَوْصَانِي بِالصَّلَاةِ وَالزَّكَاةِ مَا دُمْتُ حَيًّا

‘நான் உயிரோடு இருக்கும் காலம்வரை தொழுகையையும் ஸகாத் தையும் கொடுத்து வருமாறு அவன் எனக்கு உபதேசித்துள்ளான்!’ (அ குர்ஆன் 19:31)

வேண்டுகோள்!

இஸ்லாமியப் பெருங்குடி மக்களுக்கு, இந்நூல் வாயிலாக கீழ் வரும் வேண்டுகோள்கள் விடுக்கப்படுகின்றன!.

1) ஸகாத் என்பதை செல்வந்தர்களுக்கான இபாதத் எனக் கருதாமல் நாமும் கட்டாயம் அதைக் கொடுத்தாக வேண்டும் என்று எண்ணி நம்மிடம் இருக்கும் செல்வத்தையும் நகைகளையும் இறை வனுக்குப் பயந்து சரியாகக் கணக்கிட்டு அவற்றுக்கு உண்டான ஸகாத்தை கொடுத்துவிட வேண்டும்!.

ஸகாத்தாக நாம் கொடுக்கின்ற தொகை வெறுமனே ஒரு இருநூறு ரூபாயாக அல்லது முன்னூறு ரூபாயாகக் கூட இருக்கலாம். அதை

விட அதிகமான தொகையை நாம் அல்லாஹ்வுடைய வழியில் செலவு செய்திருக்கலாம். ஆனால், ஸகாத் கொடுக்கும் நிய்யத்தோடு அந்த 200 ரூபாயைக் கொடுத்தால்தான் நம்மீதான கடமை நிறை வேறும்!.

2) தனித்து தொழுவதைவிட ஜமாஅத்தாக தொழுவதுதான் சிறப்பு!. 27 மடங்கு அதிக நன்மையும் கூட!. அதேபோல, தனித்து ஸகாத்தை வழங்குவதைக் காட்டிலும் ஜமாஅத்-தாக கூட்டு முறையில் வழங்கினால் தான் சிறப்பு!. அதிக நன்மையும் உண்டு!. ஆகையால் ஒன்றாக சேர்ந்து கூட்டாகத்தான் ஸகாத்தை நிறைவேற்ற வேண்டும்.

3) ஆங்காங்கு மஹல்லாக்களில் பைத்துல் மால் எனப்படும் பொதுநிதி மையங்கள் நிறுவப்பட வேண்டும். அவற்றின் மூலமாக ஸகாத் மற்றும ஸதக்காக்கள் சேகரிக்கப்பட்டு ஏழை எளிய மக்களுக் கும் தகுதி உடையவர்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்!.

4) ஏறக்குறைய எல்லா மஹல்லாக்களிலும் முஸ்லிம் ஏழை மக்கள் தம்முடைய அவசரத் தேவைகளை நிறைவேற்ற வேறு வழி அறி யாமல் தம்மிடம் இருக்கும் சிற்சில நகைகளை அருகிலுள்ள அடகுக் கடைகளில் வட்டிக்கு வைத்து பணம் பெறுவதை சர்வ சாதாரணமாக பார்க்க முடியும். நாள்தோறும் நாம் நம்முடைய கண்களால் இதனைக் காண்கின்றோம்.

இருந்தும் என்ன? அதைப்பற்றி கவனம் செலுத்தாமல் நமக்கென்ன என்று நம் போக்கில் போய்விடுகின்றோம்.

பொதுநிதி என்னும் பைத்துல்மால் அவைகளை எல்லா முஹல் லாக்களிலும் ஏற்படுத்தி ஸதக்காக்களையும் ஸகாத்களையும் ஒருங்கே பெற்று முறையோடு வினியோகம் செய்வதுதான் இந்த அவலத்தை களைவதற்கான ஒரே வழி!.

5) பள்ளிவாசல் பொறுப்பாளர்களும் ஜமாஅத் பொறுப்பாளர் களும் தமது எல்லையில் வசிக்கும் முஸ்லிம் மக்களுக்கு திருமணம், மௌத், சான்றிதழ் போன்ற விஷயங்களில் பற்பல நிபந்தனைகளை ஏற்படுத்தி ஒரு முறையோடு இவற்றை செயற்படுத்தி வருகின் றார்கள். அவ்வாறே ஸகாத்தை முறைப்படுத்தி சரியான இஸ்லாமிய வடிவத்தில் வழங்குவதும் ஏழை-எளிய மக்களுடைய துயர் தீர்ப்

பதும் தம்மீது கடமை என்பதை உணர்ந்து பைத்துல் மால்களை நிறுவி கூட்டு முறையில் ஸகாத்தைப் பெற்று தக்கோருக்கு பகிர்ந்து வழங்க வேண்டும்!. கூட்டு முறைக் குர்பானியை ஜமாஅத்கள் நடைமுறைப் படுத்தும்போது கூட்டுமுறை ஸகாத்தை ஏன் நடைமுறைப் படுத்த முடியாது?

கண்டிப்பாக முடியும்!. முயற்சிதான் தேவை!!.

ஸகாத் வழங்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை!

ஸகாத் வழங்கும்போது கீழ்க்கண்ட விஷயங்களை கட்டாயம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

1) கூட்டாகத்தான் ஸகாத் வினியோகம் செய்யப்பட வேண்டும்!.

2) அமைப்புகள், ஜமாஅத்களுக்கு வழங்கும் போது அவர்கள் ஸகாத் தொகையை எங்ஙனம் செயவளிக்கின்றார்கள்? என்னும் விஷயத்தில் அக்கறை செலுத்த வேண்டும்.

3) நம்முடைய முஹல்லாவிலுள்ள ஏழை-எளிய மக்கள் நாம் வழங்கும் ஸகாத்தினால் பயனுற வேண்டும்!. ஆகையால் முடிந்த மட்டிலும் நம்முடைய மஹல்லாவில் உழைக்கும் எண்ணமுடையவர்களுக்கே முன்னுரிமை அளிக்கவேண்டும்.

நாம் இச்சிற்றேட்டில் முறைப்படி சரியான ஒழுங்கில் ஸகாத்தை சேகரித்து வினியோகம் செய்பவர்களைப் பற்றிய பட்டியலைத் திரட்ட எண்ணியும் முடியாமற் போய்விட்டது. ஏனெனில்,

1. கூட்டாக ஸகாத்தை திரட்டும் வாய்ப்பு இருந்தும் அதனை பல ஜமாஅத்துகளும் முறையாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை

2. பல அமைப்புகள் தாம் திரட்டும் ஸகாத்தை தத்தமது தலைமை இடங்களுக்கு அனுப்பி விடுகின்றன. மஹல்லாவிலேயே தகுதி உடையோர் பலர் இருக்க ஸகாத் தொகை வேறெங்கோ போகின்றது.

3. சில நிறுவனங்கள் வட்டியில்லா கடன் உதவியை வழங்குகின்றன. அதற்காக அவை ஸகாத் தொகையையும் பயன்படுத்திக் கொள்கின்றன. இதற்கு மார்க்கத்தில் எள்ளளவும் அனுமதி இல்லை!.

ஆர்வமும் அக்கறையும் உடைய நல்லுள்ளங்கள் இதில் கவனம்

செலுத்தி ஸகாத்தை முறைப்படி திரட்டி தக்கோருக்கும் அருள்மறை குறிப்பிடும் எட்டு பிரிவினருக்கும் வழங்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்!.